உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சக.] சுபானு-ஹூ மாசி மீ [பகுதி—ச.

Vol. 41. February-March 1944 No. 4.

## உள்ளுறை.

| | | |
|---|---|---|
| தென்னாட்டைப்பற்றிய சில குறிப்புக்கள்:- | ஸ்ரீ N. ஐயாஸ்வாமி சாஸ்திரியாரவர்கள், | கஉக—கங௦ |
| பண்டைத்தமிழர்:— | சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர். | கஙக—கச௦ |
| மதிப்புரை:— | | கசக—கசச |
| கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்):- | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. | கசரு—கரு௦ |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1944.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... | | | |
| 8. | * தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம் | 6 | 0 | 0 |
| | * ஷை இரண்டாம்பாகம் ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | *அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... | | | |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | 0 | 1 | 0 |

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-௪௧.] சுபானு-ஸூ மாசி மீ [பகுதி-௪.

Vol. 41. February-March 1944 No. 4.


## தென்னாட்டைப்பற்றிய சில குறிப்புக்கள்


[ஸ்ரீ N. ஐயாஸ்வாமி சாஸ்திரியார், ஆசிரியர், ஸ்ரீ வெங்கடேசுவர கீழ்த்திசைக்கலைக்கழகம், திருப்பதி.]


நம் முன்னோர்கள் நம் நாட்டை ஐந்துபகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அப்பிரிவுகள், கீழ்நாடு (பூர்வதேஶ:), தென்னாடு (தக்ஷிணதேஶ:), மேல்நாடு (பஶ்சிமதேஶ:), வடநாடு (உத்தரதேஶ:), இடைநாடு (மத்யதேஶ:) என்பன. இப்பிரிவினை இராஜசேகரனென்னும் வடநூலாசிரியர் காவ்யமீமாம்ஸா என்னும் தம் நூலில் நன்குவிளக்கி, ஒவ்வொரு நாட்டினுள்ளும் அடங்கிய முக்கிய பட்டணங்களையும் ஆறுகளையும் மலைகளையும் ஆங்காங்கு வழங்கும் வழக்கவொழுக்கங்களையும் தெளிவாகக் கூறியுள்ளார். அவ்வைந்து நாடுகளின் எல்லைகளையும் அவர் கீழ்வருமாறு காண்பித்துள்ளார். வாராணஸியின் கீழெல்லைக்கப்பால் உள்ள நாடு கீழ்நாடு. மாகிஷ்மதியின் தெற்கெல்லைக்கப்பால் உள்ளது தென்னாடு (தக்ஷிணாபத:). தேவசபையின் மேற்கெல்லைக்கப்பால் உள்ளது மேல்நாடு.

பிருதூதகத்தின் வடக்கெல்லேக்கப்பால் உள்ளது வடநாடு (உத்தராவய:). இந்நான்கு எல்லேகளின் நடுவில் உள்ளது இடைநாடு என்று (கா. மீமாம். ப. 93—4). இதனைத் தழுவியே பின்பு ஏமசந்திரரும் வாக்படரும் தேயங்களைப் பிரித்துக் கூறியிருக்கின்றனர். இப்பிரிவினை கவிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதுபோல வைதிக சிட்டர்களாலும் அங்கீகரிக்கப்பெற்றதென விளக்க இராஜசேகரர் கீழ்வரும் சுலோகத்தை ஆதாரமாகக்காட்டியுள்ளார்.

𑌹𑌿𑌮𑌵𑌦𑍍𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌵𑌿𑌨𑌶𑌨𑌾𑌦𑌪𑌿 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍇𑌵 𑌪𑍍𑌰𑌯𑌾𑌗𑌾𑌚𑍍𑌚 𑌮𑌧𑍍𑌯𑌦𑍇𑌶𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ॥

(மநு. II, 21)

இந் நடுநாட்டையே ஆர்யாவர்த்தமெனச் சொல்லுவார்கள். இவ்வாறு நாட்டின் பாகுபாடு வெகுபுராதனமானதென்பதில் ஐயமில்லே. வைதிகச்சடங்குகளேச் செய்வதற்கும் ஆர்யர்கள் வசிப்பதற்கும் தகுதியானபூமி இந்நடுநாடேயென்று உபநிஷத்துக்களுள் புராதனமான பிருகதாரண்யகோபநிஷத்துக் கூறுகிறது (I. 3, 10. பார்க்க). இந்நிலப்பகுதியை நடுஎல்லேயாகக்கொண்டு அதைச்சுற்றியுள்ள நான்கு பிரதேசங்களேயும் திசைகளின் அந்தம் (திஶாஂஞ:) என்றும் பிரகதாரண்யகம் கூறுகிறது. இதனை ஸ்ரீசங்கராசாரியர் தம் பாஷ்யத்தில் நன்கு விளக்கிக்காட்டியுள்ளார்.

பண்டைநாளில் வடநாட்டிற்கு உத்தராபதமெனப் பெயர் வழங்கிவந்தமைக்கு ஆதாரம் பாலிநூல்களே. அந்நூல்களில் வழங்கும் சமயத்தார்களுள் உட்பிரிவுகள் பதினெட்டு உள்ளன. அவைகளுள் ஒரு பகுதியார்க்கு 'உத்தராபயங்' எனப் பெயர். அவர் இடைநாட்டுக்கு வடக்கே இமயமலேக்கருகில் வசித்துவருவதால் அவ்வாறு அழைக்கப்பெற்றனர். தென்பகுதிக்கு தக்ஷிணுவயமெனப் போதாயனமகருஷியே பெயர் வழங்கியுள்ளார். வான்மீகியும் அவ்வாறே பெயரிட்டுள்ளார். மேலும் லங்காவதாரசூத்திரமென்ற பௌத்தநூல் (கி. மு. 100) நாகார்ஜுநரென்னும் ஒரு பேராசிரியர் தக்ஷிணுபயதேஹளியில் பிறந்தாரென்று கூறுகிறது (286-வது பக்கம் பார்க்க). தக்ஷிணுவயதேஹளி என்பது விதர்ப்ப

தேயம், இக்காலத்துப் பேரார் ஆக இருக்கக்கூடும்; அல்லது ஆந்திரதேயத்தின் ஓரிடமாக இருக்கலாம். பின்பு பரதர் தம் நாட்டியசாஸ்திரத்தில் (கி. பி. 100) இம்மொழியை வழங்கிப் பின் வருமாறு உரையும் கூறியுள்ளார்.

மஹேந்த்ரோ மலய: ஸஹ்யோ மேகல: பாலவிஞ்ஜர: ।
ஏதேஷு ஸம்ஶ்ரிதோ தேஶஸ்ஸ ஜ்ஞேயோ தக்ஷிணாபத: ॥*

(XIII 25)

இராஜசேகரர் தக்ஷிணபதத்தினுளடங்கிய சிறியதேயங்களைக் கூறும்பொழுது தக்ஷிணபீடபூமியில் அவர்நாளிலுள்ள எல்லாத் தேயங்களையும் கூறியுள்ளார். அவைகளுள் முக்கியமானவை: மகாராஷ்டிரம், மாஹிஷ்மகம், அச்மகம், விதர்ப்பம், குந்தலம், க்ருதகைசிகம், கர்ணுடகம், காஞ்சி, கேரளம், சோழம், பாண்டியம், பல்லவம் முதலியவை (93-வது பக்கம்). இவைகளுள் சோழ, பாண்டிய கேரளங்கள் வெகு பண்டைக்காலத்தவை எனத் தெரிகிறது. ஏனெனில் உத்தேசம் கி. மு. 246-வது ஆண்டில் அசோக மகாராஜன் வடஇந்தியா முழுவதையும் ஆந்திரநாடுவரையிலுள்ள தென்னிந்தியாவையும் ஆயுதபலத்தால் வென்று அதற்கப்பாலுள்ள தேயங்களையும் தம் தர்மத்தால் ஜயித்துவிட்டதாகக்கூறும் தருணத்தில் அத்தேயமன்னர்களைச் சோழர்கள், பாண்டியர்கள், கேரளர்கள் எனப் பெயரிட்டுக் குறித்திருக்கின்றூர் (2, 13-வது கற்சாஸநங்களைப்பார்க்க). வடமொழியிலக்கண ஆசிரியர் கருத்துப்படி சோழம் கேரளம் முதலிய மொழிகள் முதலில் தேயத்தில்

---

* இவ்வாறே பரதர் மற்றேரிடத்திலும் தென்னுட்டின் எல்லையைக் கூறியிருத்தலைக் காணலாம்.

தக்ஷிணஸ்ய ஸமுத்ரஸ்ய ததா விந்த்யஸ்ய சாந்தரே ।
யே தேஶாஸ் தேஷு யுஞ்ஜீத தாக்ஷிணாத்யாம் து நித்யஶ: ॥

XIII 40.

இதனுல் தென்கடலுக்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ள தேசங்களுக்கு தாக்ஷிணுத்தியமெனப் பெயர் வழங்கிற்று என்று தெளிவாகிறது.

வழங்கிப் பின்பு அத்தேயத்துமன்னருக்குப் பெயராக வந்தன வென்று தெரிகிறது. பதஞ்சலியே இம்மொழிகளை முதலில் உதாஹரித்துக் காண்பித்தனர். வார்த்திகநூலாசிரியரான வரருசி அவ்வளவுதெளிவாகக்கூறவில்லை. கம்போஜால்லுக் என்ற பாணினி சூத்திரத்திற்கு அவர் கம்போஜாதிப்ய இதி வக்தவ்யம் என்று ஆதி பதத்தைச் சேர்த்தார். பாஷ்யநூலாசிரியரான பதஞ்சலி உதாஹரணங்களைக் காண்பித்தார்: (கிம்ப்ரயோஜநம் சோளாத்யர்த்தம் சோள:, கேரள:, கடோர:. இங்கு கடோரமென்பது மலேயாத் தீவின் மேல்பகுதியுள்ள தேசத்தைக் குறிக்கிறது. அதற்குக் கெட்டா என்ற பெயர் இந்நாளில் வழங்குகிறது.) பாண்டிய என்ற மொழிக்கு வரருசியே பாண்டோர்ட்யண் என்று இலக்கணம் கூறியுள்ளார். இங்கு பாண்டு என்ற மொழியால் யுதிஷ்டிரன்பிதாவான பாண்டு அரசனைக் கொள்ளலாகாது. தேயத்தையும் க்ஷத்திரியஜாதியையும் குறிக்கும் பாண்டு என்ற பதத்தையே கொள்ளவேண்டும். அப்பதத்திற்கே மேற்சொன்ன லக்ஷணம் வந்து பாண்டிய என்ற உருவம் சித்திபெறுகிறது என்று கூறினர் உரையாசிரியர். ஆதலால், சோழம் பாண்டியம் முதலிய மொழிகள் முதலில் அந்தந்தத் தேயங்களில்வழங்கிப் பின்பு அத்தேயமன்னருக்கும் பெயராகப்பெற்றனவென்று நன்குவிளங்கும். மனுதர்ம சாஸ்திரத்தில் இம்மொழிகளை வழங்கியிருத்தல் கவனிக்கத்தக்கது.

ஶநகைஸ்து க்ரியாலோபாதிமா: க்ஷத்ரியஜாதய: ।
வ்ருஷலத்வம் கதா லோகே ப்ராஹ்மணாதர்ஶநேந ச ॥
பௌண்ட்ரகாஶ்சோடத்ரவிடா: காம்போஜா யவநா: ஶகா: ।
பாரதாபஹ்லவாஶ்சீநா: கிராதா தரதா: கஶா: ॥

(மநு. 10, 43—44.)

புண்ட்ரகர்கள் சோடர்கள் திராவிடர்கள் காம்போஜர்கள் யவனர்கள் சகர்கள் சீனர்கள் முதலிய எல்லோரும் க்ஷத்திரியர்களே.

ஆனால் பிராமணர்கள் இல்லாமையாலும் சடங்குகளைச் செய்யாமையாலும் அவர்கள் விருஷளர்களானார்கள். இங்கு மேதாதிதி என்னும் புராண உரையாசிரியர், இப்பதங்கள் உண்மையில் தேயத்தைக் கூறும் மொழிகளானபோதிலும் இவ்விடத்தில் அப்பதங்கள் க்ஷத்திரியர்களையுணர்த்தி அச்சம்பந்தத்தால் அத்தேயங்களுக்கும் வழங்கலாயின என்ற பக்ஷத்தைத் தழுவிக் கூறலாயிற்று என்று உரைசெய்திருத்தல் காண்க. இச்சுலோகப்படி சோழபாண்டிய திராவிடர்கள் முன்பு திரைவர்ணிகராகவிருந்து பின்பு சூத்திரராக எண்ணப்பட்டுள்ளாரென்ற கருத்து நன்குவிளங்கும். அப்படியே யவனர்களும் சீனர்களும் இந்நாட்டிலிருந்து வெளிநாட்டில் குடியேறினரென்றும் தெரிகிறது. இங்கே சிலர் மநுதர்மசாஸ்திரம் திராவிடர்களை இகழ்ந்து தாழ்வாகச்சொல்லுகிறதெனக் குறைகூறுகின்றார்கள். அது பொருந்தாது. முன்னாளில் சங்கராசாரியருக்கும் முன்பு பாண்டியகுலத்தில் சுந்தரபாண்டியனென ஓர் அரசன் இருந்தான். அவன் ஆன்மஞானத்தில் ஜநகருக்கொப்பானவன். பல நூல்களை எழுதினவன். அந்த ஞானியை த்ரவிடாசாரியர் எனப் பல வேதாந்தநூலாசிரியர்கள் தம் நூல்களில் உதாகரிக்கின்றனர். ஆரியர்கள் பாண்டியமன்னர்களை உண்மையில் க்ஷத்திரியர்களாகவே கருதினர் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டுமோ!

வான்மீகிமுனிவர் கிட்கிந்தாகாண்டத்தில் (41) தென்னாட்டிலுள்ள சோழர் பாண்டியர் முதலியவர்களைச் சொல்லியிருத்தலோடு மற்றஇடங்களிலும் தென்னாட்டுவீரர்களை அவர் கூறுதல் கவனிக்கத்தக்கது. பாலகாண்டத்தில் தசரதமகாராஜன் தன் அசுவமேதயாகத்திற்குத் தென்னாட்டுமன்னர்களையும் அழைத்தான் (I, 13, 28) எனச்சொல்லிப் பின்பு அயோத்தியாகாண்டத்தில் தசரதராஜனுடைய ராஜ்யம் எவ்வளவுதூரம் பரவியிருந்ததெனக் கீழ் வரும் சுலோகத்தில் நன்கு விளக்குகிறார் முனிவர்:—

யாவதாவர்தே சக்ரம் தாவதீ ச வஸுந்தரா ।
த்ராவிடா: ஸிந்துஸௌவீரா: ஸௌராஷ்ட்ரா தக்ஷிணாபதா: ।
வங்காங்கமகதா மத்ஸ்யா: ஸம்ருத்தா: காசிகோஸலா: ॥ (10, 35-36)

இவற்றால் தென்னாடுமுழுதும் தசரதராஜ்யத்தில் சேர்ந்திருந்ததென விளங்குகிறது. இக்கருத்தை வலியுறுத்தப் பின்பும் வான்மீகிகூற்றைக் காணலாம். இராமபிரான் வாலிவதத்தை நீதியெனவிளக்கப் பின்வரும் காரணம் கூறுகிறார். 'இத்தேயம் இக்குவாகுமன்னரின் பூமியானபடியால் இங்கு நிகழும் அநீதியைத் தடுத்து நீதியை நிலைநாட்டுதல் இக்குவாகு அரசனுடைய மரபினர்க்கு உரிமையானதே' என்று. ('இக்ஷ்வாகூணாமியம் பூமி:' ஸர்க். 18. சுலோக. 6.)

தென்னாட்டில் உரிமை இக்குவாகுவம்சத்தினர்களுக்குத் திலீபராஜன்மகனாகிய ரகுமகாராஜன்காலம்முதல் வந்திருக்கக்கூடுமெனக் கீழ்வரும் வரலாற்றால் உணரலாம். ஸ்ரீகாளிதாஸ மகாகவி தம் ரகுவம்சகாப்பியத்தில் ரகுமகாராஜனின் திக்விஜயத்தை வெகுசிறப்புடன் வர்ணித்துள்ளனர். அங்கு கலிங்கதேய மன்னனாகிய மஹேந்திரநாதனைவென்று கடலோரவழியே தென்றிசைசென்று காவேரியாற்றில் நீராடி மலயவரையின் அடிவாரத்திற் சற்றுத் தங்கிப் பின்பு பாண்டியம் சென்றானெனக் கூறப்பட்டுளது. பாண்டியர்கள் தாம்ரபர்ணிநதி கடலுடன் கலக்குமிடத்துப் பெறப்படும் முத்துக்களைக் கப்பமாக அளித்தனரென்று கவி வருணிக்கிறார். தாம்ரபர்ணிமுத்துக்கள் கௌடிலீய அர்த்தசாஸ்திரத்திலும் வெகுசிறப்பாகக்கூறப்பட்டுள்ளன (தாம்ரபர்ணீகம் பாண்ட்யகவாடகம், அதி. 2. அத்யா. 11.). பாண்ட்யா: என்ற சொல்லுக்கு பாண்டோ: ஜநபதாநாம் ராஜாந: பாண்ட்யா: என்ற மல்லிநாதரின் உரை பாணினிவியாகரணத்திற்குப் பொருத்தமானது. அதன்படி பாண்டு என்று சிலதேயங்கள்; அவைகளுக்கு மன்னர்கள் பாண்டியர்கள் என்று விளங்குகிறது. காளிதாஸருடைய ரகு திக்குவிஜயவருணனையைச் சற்று ஆழ்ந்துபடிக்கும்பொழுது ரகுமகாராஜன் கீழ்கடலோரம்வழியாகத் தொண்டைநாடு சோழநாடு முதலியவற்றிற்குச் செல்லவில்லை என்று எளிதில் தெரியும். அக்கவி குப்தஸாம்ராஜ்யமன்னராகிய சந்திரகுப்தர், உத்தேசம்

கி.பி. 400.ல் இருந்தவர். அந்நாளில் தொண்டைநாடு, காஞ்சிமாநகர், சோழநாடு முதலியவை ஏற்படவில்லை எனச் சொல்லுதல் தகுதியாகாது. மேலே நாம் கூறியவாறு அசோகமாமன்னரே சோழர்களைப்பற்றிப் பேசியுள்ளார். காஞ்சிமாநகரமும் கி. பி. முதலாவது அல்லது இரண்டாவது நூற்றாண்டிலேயேபிரசித்திக்குவந்ததெனத் தென்னாட்டுச் சரித்திரம் கூறுகிறது. ஆதலால் காளிதாஸர் ரகு மகாராஜன் தொண்டைநாட்டையும் காஞ்சியையும் வென்றானென வர்ணித்திருந்தால் அது பண்டைக்காலத்தென்னாட்டுச் சரித்திரத்திற்கு முற்றும் மாறுபாடாகவிருக்குமென்று நன்கு உணர்ந்தே அப்படிச்செய்தனரில்லை. இக்கருத்து உண்மையாகில் பாண்டிய மன்னர்குலம் தென்னாட்டில் வெகுபண்டைக்காலத்தது என்று ஏற்படுகிறது. இவ்வாறே காளிதாஸர் மற்றோரிடத்திலும் சரித்திரத்திற்கு ஒப்ப வருணித்திருத்தல் காண்க. அதாவது ரகுவம்சம் ஆறாவது ஸர்க்கத்தில் இந்துமதீஸ்வயம்வரவிவாகசமயத்து வந்துள்ள பற்பல அரசர்கள் வர்ணிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் தென்னாட்டிலிருந்து பாண்டியமன்னர் ஒருவரே கூறப்பட்டுள்ளனர். அவ்வரசை மிகவும் சிறப்பாகவருணித்திருத்தலை நோக்குங்கால் காளிதாஸருக்குப் பாண்டியமன்னர்பால் இருக்கும் மதிப்பு நன்கு புலப்படும். இவற்றால் வான்மீகி, காளிதாஸர் இவ்விரண்டுகவிகளால் மேலேகூறப்பட்ட விஷயங்களை எல்லா அம்சங்களிலும் சரித்திரத்திற்கு ஒத்த உண்மைவிஷயங்களாகவே கருதவேண்டுமெனச் சொல்ல நான் முயலவில்லை. அவர்கள் கவிகளானபடியால் கற்பனைகளும் செய்யக்கூடும். ஆனால் அக்கற்பனைகளிலும் சிறிது உண்மை அடங்கியுள்ளதென விளக்கவே இதுகாறும் கூறமுயன்றேன்.

அப்பாண்டியமன்னர்களின் தலைநகர், தாம்ரபர்ணீநதி கடலுடன்சேருமிடத்து முற்காலத்தில்விளங்கிய கவாடபுரமென்ற பட்டணமே என்று தமிழ்ப்புலவர்கள் கூறுகின்றனர். பின்பு அந்நகர் கடல்கொள்ளப்பட்டதெனவும் சொல்லுகின்றனர். அத் தலைநகரை வான்மீகியும் கிட்கிந்தாகாண்டத்திலே குறித்துள்ளனர். (ஸர்க். 41. சுலோக. 19. இதுபற்றி விரிவானகட்டுரை ராவ் ஸாஹிப். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களால் எழுதப்பட்டுள்ளது. அவர்கள் ஆராய்ச்சித்தொகுதி பார்க்க). அப்பட்டினத்திற்கு

தாம்ரபர்ணீ என மற்றொருபெயரும் வழங்கிவந்திருக்கலாமென்று தோன்றுகிறது. ஏனெனில் சிங்களத்தீவில் பௌத்தமதம் பரவுதற்குமுன் விஜயன் என ஒரு மன்னன் இருந்தான். அவன் பாண்டியகுலத்திலிருந்து ஒரு பெண்ணை மணம் செய்துகொண்டு தாம்ரபர்ணீ என ஒரு நகரத்தையும் அத்தீவில் உண்டாக்கினன் என்று மகாவம்சம் என்னும் அத்தீவின் சரித்திரநூல் கூறுகிறது (அ. 7). ஆதலால், காவேரிநதி கடலோடுசேருமிடத்துக்காவிரிப்பூம் பட்டினம்போலக் கவாடபுரமும் தாம்ரபர்ணீப்பட்டினம் அல்லது தாம்ரபர்ணீ என்ற பெயருடன் விளங்கியிருக்கக்கூடும். காளிதாஸரும் "தாம்ரவணீஸமேதஸ்ய முக்தாஸாரம் மஹோததே:" (ரகுவம்சம், ஸர். 4. சுலோக. 50) என்ற சுலோகத்தில் "தாம்ரபர்ணீ" என்ற ஒரு பதத்தால் நதியையும் நகரத்தையும் குறித்தார் போலும் என்று தோன்றுகிறது. அசோகமகாராஜனும் இந்த நகரத்தையே "ஆதாம்ரவணீ" எனத் தம் சிலாசாஸனத்திற் குறித்துள்ளார்போலும். ஆனால் அசோகர் கல்வெட்டாராய்ச்சிப் புலவர் சிலர் இலங்கைத்தீவின் தாம்ரபர்ணிநகரத்தையேகொள்ள வேண்டுமெனக் கருதுகின்றனர்.

அசோகமகாராஜன் சோழபாண்டியர்களை ஆயுதபலத்தால் வெல்லாவிடினும் அவர்களுடன் நேசமாகி உறவை வளர்த்துவந்தானென்றும், அவ்வப்போது தர்மத்தைப் பரவச்செய்யத் தம் தூதர்களையனுப்பிப் பல இடங்களில் மடங்களையும் கோவில்களையும் கட்டிவைத்தானென்றும், தம் மகனான மஹிந்தனை அனுப்பித்தஞ்சை ஜில்லாவில் ஒருபெரிய மடத்தைக் கட்டினனென்றும் வின்ஸேண்டு ஸ்மித் எனும் மேனாட்டுப்புலவர் கூறியுள்ளார் (History of India 3rd ed. p. 185). அவ்விடமிருந்தே மஹிந்தனைச் சிங்களத்திற்கு அனுப்பினன் என்றும் அவர் கூறுகின்றார். இவ்விஷயத்தை வலியுறுத்தி ஹ்யூங்க்ஸாங் என்ற ஒரு சீன யாத்திரிகர் கீழ்வருமாறு சொல்லியிருக்கின்றார்.

"திராவிடநாடு 6000 லீ (யோஜனை) சுற்றளவுடையது. அதன் தலைநகர் காஞ்சிபுரம். அதன் சுற்றளவு 30 லீக்கு மேலானது.

ஜனங்கள் தீரர்கள், நம்பத்தக்கவர்கள், பொதுஇயக்கத்தில் ஈடு பட்டவர்கள், கல்வியை மேலாக மதிக்கின்றவர்கள், அவர்களின் பாஷை மத்தியதேயத்தில் வழங்குவதைவிட மாறுபட்டது. அங்கு 100-க்கு மேல் பௌத்தமடங்கள் இருக்கின்றன. அவைகளில் 10000 பேருக்குமேல் பௌத்தசன்னியாசிகள் இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஸ்தவிரசமயத்தை நாடினவர்கள். தேவன் கோவில்கள் 100-க்குமேல் இருக்கின்றன. அதனுள் திகம்பரர் கோவில் அதிகம். புத்தர் அவ்வப்போது இத்தேயத்திற்குவந்து தர்மத்தை உபதேசித்துப் பலபேர்களைச் சங்கத்தில் சேர்த்துள்ள னர். அவ்விடங்களில் எல்லாவற்றிலும் அசோகமகாராஜர் தூபங் களைக் கட்டிவைத்திருக்கின்றார்" (On Yuan Chwang's travels in India by Thomas Watter. Vol. II. p. 226).

புத்தர் தென்னாட்டிற் பலதடவை வந்து தர்மோபதேசம்செய் துள்ளனரென்பதற்குப் பாலிநூல்களில் ஆதாரம் கிடைக்காததி ஞல் கன்னபரம்பரையாக ஜனங்கள் சொல்லுதலைக் கேட்டு அவ் வாறு கூறினரென்று நினைக்கின்றேன். இவ்வாறே சிங்களத்தீவிற் கும் புத்தர் மூன்றுதடவை வந்து தர்மோபதேசம் செய்தனரென்று மகாவம்சம் கூறுகின்றது. அசோகமன்னர் தென்னாட்டிலே பல தூபங்களைக் கட்டினரென்று அவர் தம் சிலாசாஸனங்களில் ஒன்றி லாவது கூறவில்லை. தாம் விஜயம்செய்திருத்தலையும் ஆங்காங்கு மனி தர்களுக்கும் மிருகங்களுக்கும்வேண்டிய வைத்தியசிகிச்சாசாலைகளை நிறுவுதலையும் பற்பல பெருவழிகளில் மரங்களைவளர்த்தலையும், தண்ணீரில்லாதவிடங்களிற் கிணறுகளைவெட்டுதலையும் செய்வித்தே னென்றுமாத்திரமே சொல்லியுள்ளார் (2-வது கற்சாஸனம் பார்க்க). கடைச்சங்கநூலாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தமிழ் நூல்கள் தமிழ்நாட்டிலே பௌத்தமடங்களும் தூபங்களும் ஆங் காங்குக் காணப்படுதலைக் குறிக்கின்றன. ஆதலால் ஆறுவது நூற்றாண்டில்வந்த சீனயாத்திரிகர் தமிழ்நாடுவருவதற்குமுன்பே அத்தூபங்களும் மடங்களும் கட்டப்பெற்று அவைகள் பலமன்ன ராற் கட்டப்பெற்றனவென்றநினைவு மறைந்தமையால் ஜனங்கள் அசோகமன்னர்பால் அந்நற்செயலை ஏற்றி வழங்கத்தொடங்கின கள் என்று தோன்றுகிறது.

ஏழாவது நூற்றாண்டின் முதற்பகுதியில் (கி. பி. 600—650) மகேந்திரவிக்கிரமவர்மன் என்ற பல்லவமன்னன் இயற்றிய மத்த விலாஸப்பிரஹஸநம் என்ற சிறிய நாடகநூலைக் கண்ணுற்றவர் களுக்கு அக்காலத்துத் தமிழ்நாட்டில் சமயக்கணக்கர்கள் எவ்வா றுயினரென்று நன்கு விளங்கும். அந்நூலைப் பிரகஸந நாடக முறையில் இயற்றியபடியால் ஆசிரியர் எல்லாச்சமயங்களையும் நகைக்குமாறே பேசுகின்றார். ஆனாலும் அப்பேச்சில் அக்காலத்துச் சமயநிலைமை புலப்படுகிறது. பௌத்தசமயத்தைநோக்கி அவர் கூறுதல் கவனிக்கத்தக்கது. அதாவது, "பல மடங்களில் தனங் கள் மிகுதியாயிருப்பதால் பௌத்தசன்னியாசி நீதிஸ்தலாதிபதி களின் வாயை அவர்கள் விருப்பத்திற்கேற்பப் பணத்தினால் நிரப்பத் திறமைவாய்ந்தவனாக இருக்கின்றான். நமக்கு (காபாலி கர்களுக்கு) அவ்வாறில்லை" என்று கூறியுள்ளார். இதனால் அந் நாளில் பல பௌத்தமடங்கள் தேவையான மூலதனங்களுடன் செழித்தனவென்று நன்கு விளங்கும். மேலே எடுத்துக்காட்டிய மேற்கோளிற் பௌத்தசமயிகள் தேரவாதத்தையே பின்பற்றினர் என்று சீனயாத்திரிகர் கூறியுள்ளார். அதுவும் பெரும்பான்மை யோர் அவ்வாறுயினர் என்றுதான் கருதவேண்டும். ஏனெனில், திங்நாகர் என ஒரு பேராசியர் காஞ்சிமாநகரத்தருகில் ஸிம்ஹ வக்திரமென்றவூரில் பிறந்து முதலில் வாத்ஸீபுத்திரீய பௌத்த சமயத்தைநாடிப் பின்பு வஸுபந்துவின் சமயத்திலே சேர்ந்தாரென அவரே மற்றோரிடத்திற் கூறியுள்ளார். ஆனால் பெரும்பான்மை யோர் தேரவாதசமயத்தை அதாவது பாலிநூல்களில் வழங்கும் சிராவக யான சமயத்தையே பின்பற்றினர் என்று மணிமேகலை முதலிய தமிழ்நூல்களை ஆழ்ந்து ஆராய்ந்தவர்களுக்கு நன்கு புலப் படும். (என் ஆங்கிலக்கட்டுரைகள் Central Teaching of Manimekhalai, Gleanigs of from Nilakesi p. 60 பார்க்க.) இதைப் பற்றிப் பின்பு விரிவாக வரையலாகும்.

# பண்டைத் தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

(அ0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## VII குறிப்பான தெய்வ வழிபாடுகள்.

மனிதன் தன்னை அடக்கி ஆளுகின்ற ஒருபரம வல்லமை தனக்கு மேல் உண்டு என்றதை ஆதிதொட்டே உணர்ந்து அந்தப் பரம்பொருளுக்கு வழி பாடுசெய்வோனானன் என்பதற்கு ஒரு சிறிதும் ஐயம் இன்று. அறிவு விளக்கம் உள்ள எல்லா மனிதரிடத்திலும் இருக்கின்ற மனச்சான்று இதற்கு ஒரு திறம்பாத அத்தாட்சியாம். தகாதது செய்தவுடன் நெஞ்சை வருத்து வதும், தக்கது செய்யும்போது அதை மகிழ்விப்பதுமான ஒரு நடுத்தீர்ப்பு மனிதர் அனைவருடைய மனத்தினுள்ளும் காணப்படுகின்றது. நல்வினை தீவினைகளுக்குப் பலன் அளித்து அனைத்தையும் ஆண்டு நடத்தும் ஒருவர் உண்டு என்ற இந்த உணர்ச்சி புத்தித்தடுமாற்றமில்லாத சகலர்மாட்டும் நிகழ்கின்றது. வேறொருவகையாய்க்கூறின் கடவுள் உண்டு எனும் தீர்ப் பான உணர்வு எல்லாக்காலத்திலும் எல்லா இடங்களிலும் எல்லாச்சனங்க ளுள்ளும் ஆரம்பந்தொட்டே நிலைபெற்றுவருகின்றது. பண்டைநாட்களின் பெரும் மனுக்கூட்டங்களாகிய சுமேரியர் எகிப்தியர் பபிலோனியர் இந்தியர் சீனர் அமெரிக்கர் கிரேக்கர் உரோமர் ஆதியவர்களெல்லாம் குன்றாத கட வுட்கொள்கையுள்ளவர்கள். திரிபுபடாத மனதுள்ள எவனாதல் எக்காலத்தி லாதல் பரம்பொருளின் உண்மையை நெஞ்சார மறுத்தது உண்டோ என்பது சந்தேகம். வாயினால் நிரீச்சுரவாதம் பேசுவோரும் உள்ளத்திலே கடவுள் உண்மையை மறுக்கமாட்டாதோரேயாம் என்பது உய்த்துணரத் தக்கது.

### தனிமுதற்கோள்கை.

கடவுட்கொள்கை மனுக்குலத்தின் இளமைக்காலத்திற் காணப்பட்ட தில்லை என எம்நாட்களிற் சிலர் கூறியது உண்டே எனில், அக்கூற்றுப் பொருந் தாது. அது மனிதனுக்கு அழியாத சித்துருபமான ஆன்மா இல்லை என முன் னொருகால் வாதித்த சட வாதிகளுடைய ஒவ்வாதகொள்கையால் எழுந்தது.

மண் கல் முதலிய சடப்பொருள்களிலிருந்து தாவரங்களும், அவற்றிலிருந்து மிருகாதிகளும், அவற்றிலிருந்து மனிதரும் இலட்சாதிலட்ச ஆண்டுகளாய்ப் படிப்படியாய்ப் பரிணமம் அடைந்து உலகிலே தோற்றினர் என்பது அவர்களது கொள்கை. ஆயின், மண் கல் ஆதியன கோடா கோடிலட்சவருஷங்களாய்க் கிடந்தும், தங்களில் அடங்கியிராததாகிய உயிரைப் பிறப்பிக்கமுடியாது. உயிருள்ள தாவரங்கள் எத்தனை ஊழிக் காலங்களாய் நின்று தழைத்தும், தங்களது வளர்ச்சிச்சக்திக்கு மேற்பட்டதாகிய பஞ்சேந்திரிய தத்துவத்தைப் பிறப்பிக்க அறியா. ஐம்புலஅறிவுமாத்திரங்கொண்ட மிருகாதிகளும் பேரூழிகள் வெள்ளமாய்ச்செல்லும்வரையில் ஓடியாடித்திரிந்தும், சித்துருபமான மனித ஆன்மாவை உண்டாக்கமுடியாது. சடத்திலிருந்து சித்துவருதல் ஒருபோதும் கூடாதாகையால், மனிதஆன்மா படிப்படியாய் எழுந்ததென்ற கொள்கை பொருந்தாது. மனிதன் என்றும் சித்துருபமான ஆன்மாவுள்ளவனுகவே இருந்துள்ளான் என்பது ஐயந்திரிபற்ற உண்மை ஆதலால், அவன் என்றும் மனச்சான்றும் கடவுட்கொள்கையும் உள்ளவனுகவே விளங்கினுன் என்பது ஒருதலையாம். சென்ற நூற்றூண்டில், அண்டிறுலாங் என்பவரைத் தலைவராய்க்கொண்ட விஞ்ஞானிகள் சிலர் இன்றைக்கும் உலகிலே கடவுட்கொள்கையில்லாத காட்டுமிறுண்டிச்சாதிகள் இருக்கின்றன என்றும், ஆதலால் காட்டுமிறுண்டியேயான ஆதிமனிதனும் அக்கொள்கையற்றிருந்தான் என்றும் சொல்லிக்கொண்டுவந்தனர். ஆயின், அண்டிறுலாங் தாமே பின், பட்சபாதமில்லாத நெடுங்கால ஆராய்ச்சியாற் கண்டுகொண்டபடி, மரம் கல் முதலியவைகளை வழிபடுவோராய் மிக இழிந்த வாழ்க்கையுள்ளோராய் மிருகத்தன்மைபூண்டுகிடக்கின்ற காட்டுக்குலங்களிடத்திலும் அனைத்தையும் ஆண்டுநடத்திவருகின்ற ஒரு தலைமைபொருந்திய தெய்வத்தைப்பற்றிய உணர்ச்சி அடிப்படையிற் காணப்படாமல் இல்லை என்றது வெளிப்பட்டது. தற்காலத்து நடுநிலையுள்ள ஆராய்ச்சியாளரது ஒத்த துணிபின்படி, ஏககடவுட்கொள்கையே நாகரிகமற்றுக்கிடக்கின்ற பழங் குலங்களுளெல்லாம் காலத்தளவில் முந்தியது; அக்கடவுளை அன்னேர் ஆபத்தானதருணங்களில்மட்டும் உதவிக்கு அழைப்போராயிருந்தும், சாமானிய உலகவாழ்க்கையில் தாங்கள் ஒவ்வோர் நியாயம்பற்றி ஏற்படுத்திக்கொண்ட சிறுசிறுதெய்வங்களையே வழிபடத்தொடங்குவோராயினர். பெரிய

கடவுளுடைய சர்வஏகாதிபத்தியத்தை ஒருவாறு பிரித்து ஒவ்வோர் தெய்வத்துக்கு உரிமையாக்கிக்கொண்டமையேபலதெய்வவழிபாட்டிற்குஉற்பத்தியாம். ஒன்று என்ற எண்ணை அடிப்படையாய்வைத்துக்கொண்டல்லாமல், இரண்டு முதலிய எண்களை வழங்கக்கூடாததுபோல ஒரு தனிமுதலை அடிப்படையாக்காமற் பலதெய்வக்கொள்கை வரமுடியாது என்பர் ஆன்ரோர்.

தொடக்கத்தில் மனிதன் மிருகத்தன்மைகொண்ட காட்டுமிராண்டியாய் இருந்தனன் எனச் சொல்லுதலும் அமையாது. பழங்குலங்களெல்லாம் ஆதிமனிதனின் பூரணநிலைமையைப் பாரம்பரியமாய்ச் சாதித்துக்கொண்டு வந்தன. கிரேதயுகம் என்றும் பொன்யுகம் என்றும் பெயரிடப்பட்ட ஆதிகாலத்தில் மனிதன் ஒரே கடவுட்கொள்கையுள்ளவனாய்ச் சீராய் வாழ்ந்திருந்தான் என்பது எல்லாப் பூர்வசாதியாரிடத்தும் உள்ள ஐதிகம். பழைய கற்காலமனிதர் எனப்படும் பண்டைமானுடர் கற்களைக்கொண்டு ஆயுதங்களை உண்டாக்கினர் என்றமையால் அவர்களுடைய புத்திதீட்சணியத்துக்கு இழுக்குவராது. செம்புமுதலிய உலோகங்கள் அந்நாட்களிலே கண்டுபிடிக்கப்படாமையினாலேயே அன்னோர் தமக்குக் கற்களால் உபகரணங்களை ஆக்கிக்கொண்டார். ஆயின் அக்கல்லாயுதங்களை நாம் நோக்கும்போது, அவைகளைப் பண்டைநாள்மனிதர் சூழ்ந்து உருவாக்கிய விதம் நமக்கு ஆச்சரியத்தை விளைக்கின்றது. கல்லைக்கொண்டே ஊசிபோன்ற மெல்லிய ஆயுதங்களையும் ஆக்குவது எவ்வளவு அரியசெயல்! அக்கல்லூசிகளால் நிறக்கல்மணிகளைத் துளைத்து ஆபரணங்களாகக் கோத்து அணிந்தது எத்துணை விசித்திரம்! ஆதலால், புத்திக்குறைவல்ல, எற்ற முதற்பொருட்குறையே கல்லாயுதங்கள் வழங்கக் காரணமாயிற்று. என்றேனும் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பண்டைக் காலமனிதரும் நெருப்புமூட்டுதல், மிருகங்களைப் பழக்கியெடுத்தல், சித்திரம் வரைதல், இறந்தோரைச் சேமித்து அன்னோர் பின்னுஞ் சீவிப்பர் எனும் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற அன்னபானாதிகள் ஆயுதங்கள் முதலியவற்றை அவரோடுவைத்தல் முதலியனவாய் எந்த உயர்ந்த விலங்குதானும் செய்யமுடியாதவைகளைச் செய்திருக்கின்றமைக்குத் திறம்பாத சான்று உண்டு. ஆதிமனிதன் போதிய புத்தியுள்ளவனாதலால் மனச்சான்றும் உள்ளவனே. மனச்சான்றுள்ளவனாயின் கடவுட்கொள்கையும் உள்ளவனே என்றது மறுக்கப்படாத ஒரு முடிபு.

மனுக்கூட்டங்களுட் பெரும்பங்கானவை வெகுதொலைப்பட்டகாலத்திலேயேபலதெய்வவழிபாட்டை மேற்கொண்டுவிட்டனவாகத் தோன்றுகின்றன. ஏகதெய்வவழிபாட்டில் நிலைகொண்ட பண்டைக்குலம் ஒன்றே சரித்திரத்தில் வெளிப்படுகின்றது. அது எபிரேயகுலமாம். இதற்கு அக்குலத்தாருடைய விவிலியநூலில் அடங்கிய மோசேசின் பஞ்சாகமம் தெளிந்த சான்றாகும். எபிரேயசனம் ஒன்று நீங்கலாக மற்றைய புராதன குலங்கள் கொண்ட சமயவழிபாடு நாம் ஆராய்கின்றதுறைக்கு ஒரு நல்ல ஏதுவாகின்றது. ஒரு பெருங்குலம் தான் பண்டுதொட்டு ஏற்படுத்திவைத்துக்கொண்ட தெய்வங்களையும் வழிபாடுகளையும் இலகுவிற் கைவிடாது. அது பிரிவுபட்டு வெவ்வேறு இடங்களிற் போய்க் குடியேறுங்காலையிலும் தன் தெய்வம் வழிபாடு ஆதியவைகளை ஒருசிறிதாவது கொண்டுசென்று கைக்கொள்ளாமலிராது. இதனால் பல தூரப்பிரதேசங்களிலே ஏறக்குறைய ஒத்தபெயர் குணங்குறிகள் உள்ள தெய்வங்களும் சிறப்பான ஒத்தவழிபாடுகளும் காணப்படுமாயின், அவைகளைப்பயில்வோர் ஒருகாலம் ஒரே இடத்தில் ஒருங்கு வசித்தவர்களாதல் வேண்டும்; அல்லது தங்களுள் மிக நெருங்கி அளவளாவிய கூட்டுறவாவது கொண்டவர்களாதல்வேண்டும். இனி, மத்தியதரைப் பழங்குலங்களையும் இந்தியாவெங்கணும் பண்டைக்காலத்தில் பரந்திருந்த நம் தமிழரையும் இவ்வுரைகல்லில் உரைத்தறியக்கடவோம்.

## நிலமடந்தையும் அவள் இளம்புதல்வனும்.

இற்றைக்குச் சில ஆண்டுகளின்முன்னரே, வடமேற்கு இந்தியாவில் சிந்துநதி ஒருகாலம் ஓடிக்கொண்டிருந்த பிரதேசத்தில், வடக்கே ஹரப்பாவும் தெற்கே மொஹெஞ்சோதரோவும் எனும் இரு பூர்வகாலத்துப்பட்டணங்களின் அழிவுகள் அகழ்ந்துகாணப்பட்டன. புதையுண்ட அப்பட்டணங்களை மூடிக்கொண்டிருந்த மண்மேடுகளைத் தோண்டி வெளிப்படுத்திய அரசாங்கப் பழம்பொருளாராய்ச்சிக்குழாத்தின் தலைவரான சேர் ஜோன் மார்ஷல் என்பவருடைய தீர்ப்பான கருத்தின்படி, அன்னவை கி. மு. மூவாயிரம் ஆண்டுக்கும் முற்பட்டவை. சரித்திரத்திற்கு எட்டாதகாலங்களின் பாதகண்டத்துவரலாறு அவ் அழிவுகளுட்கண்டெடுத்த விக்கிரகங்கள், முத்திரைகள், மட்பாண்டங்கள், கல்ஆயுதங்கள், வளையல்கள், நகைகட்டுக்கள்

முதலிய பொருள்களால் ஒருவாறு நிச்சயிக்கத்தக்கதாய் இருக்கின்றது. இனி அங்கு அகப்பட்டவைகளுட் பல பெண்தெய்வஉருவங்கள். அவற்றினாலும், எகிப்து இலாம் மொசொப்பொத்தோமியா சின்னஆசியா சீறியா சிப்புறுதீவு கிரேத்தாதீவு பால்கன்ஸ் திருன்ஸ் கஸ்பியா பலுச்சிஸ்தான் எனும் இடங்களிற் கண்டெடுத்த பெண்விக்கிரகங்களாலும்* இந்தியா தொடக்கம் கிரேசியாவரைக்கும் இடையீடில்லாதே ஒருகாலம் பெண்தெய்வவழிபாடு நடந்தமை வெளிப்படும். இவ்வழிபாடு அக்காலத்துப் பிறகுலங்களுள் இல்லாதது; மத்தியதரைக்குலங்களுக்கே சிறப்புரிமையானது; பெண்தெய்வ வழிபாடு ஆதிதொட்டு மனுக்குலத்தால் ஆசரிக்கப்பட்டதும் அன்று; அது முந்தியதாகிய ஏகதேவவழிபாட்டில் நின்றுதான் இடையில் பரிணமித்து வந்தது என்றமை நோக்கத்தக்கது. தங்களுக்கு ஊணும் உடையும் பலமும் சுகமும் உண்டாகக்காரணமானவர் அனைத்தையும் ஆக்கி அளித்து அழிக்கும் தனிமுதலே என்ற உண்மையை உணர்ந்தவர்களுள் ஒரு சாரார் காணப்படாத அவரைத் தூரத்தில்வைத்துவிட்டு, இவற்றைக் கண்கூடாகத்தந்த நிலமே வழிபாட்டிற்கு உரியது என்று கொள்வோரானார்கள். நிலத்தைப் பெண்ணாகக்கருதியதற்கு வேறு ஒரு நியாயத்தை அறிஞர்கள் எடுத்துச் சொல்லுவர். மத்தியதேசங்களில் பெண்களே நிலத்தைப் பயிர்செய்து நிலத்தரசிகளாய்வந்தமையினால் நிலமும் பெண்ணாகக்கருதப்பட்டது என்பர். வடதுருவத்தை அண்டிப்போய் வெள்ளையராகிவிட்ட குலத்தவர்கள் பஞ்சபூதியங்களைப் பெரும்பான்மை ஆண்ரூபமாகவைத்து வழிபடத்தொடங்க, தென்பாகங்களிற் குடிகொண்டோர் மிருகவேட்டையில் நாட்கழித்து மிருகவழிபாட்டை மேற்கொண்டார் என்பர். ஆகவே இக்கொள்கையை ஒரேபடித் தாய்க்கொண்டோர் எல்லாம் ஒன்றில் ஒரேயிடத்தில் வதிந்திருந்து பின் பிரிந்துபோனவராதல்வேண்டும். ஒன்றில் வெவ்வேறிடத்தில் வதிந்திருந்தும் ஆதிநாளில் இதை ஒருவரிடமிருந்து ஒருவர் பெற்றுக்கொள்ளத்தக்கபடி தம்முள் அன்னியோன்னியக் கூட்டுறவு உள்ளோராய் நிலைபெற்றிருந்தவராதல்வேண்டும்.

---

* For authorities see Sir John Marshall's Mohenjo-Daro and the Indus civilization, I p.50 and Seq.

நிலமடந்தை ஆராதனமும் இயற்கைவழிபாடும் ஒன்றே என்பதற்கு, ஹறப்பாவில் கண்டெடுத்த ஒரு நீள் சதுரமுத்திரையில் ஒருபெண் காலிடந்த படி தலைகீழாய்நிற்க அவள் உதரத்தில் நின்று ஒரு பூண்டு வெளிப்படுவது நற்சான்று.* நிலமடந்தைவழிபாடு மெசொப்பொத்தாமியாவிலிருந்து தெற்கி லும் மேற்கிலும் பரவிற்றென்று சிலரும், மெசொப்பொத்தாமியாதானும் இதனை அனத்தோலியா அல்லது சிரியாவிலிருந்து பெற்றுக்கொண்டது என்று சிலரும் ஊகிப்பர். பினீசியாவே இவ்வழிபாட்டுக்குத் தாயகமாம் என்பாரும் உளர்†. எகிப்தியரின் செக்கேத் (சொக்கீத்) அல்லது ஹற் - ஹோர் (ஹோரூஸ்தெய்வத்தின்தாய்) ஒரு உக்கிரதேவதை என்று சொல் லப்படுகின்றது. இவள் சிங்கமுகமுள்ளவளாதலால் செக்கேத் எனப்பட் டாள் என்ப. ஆதியில் இவள் பசுரூபமாய்த் தொழுதுகொள்ளப்பட்டவள். மனுக்குலம் செய்த தீவினையின் நிமித்தம் இப்பெண் அணங்கு உலகமுழுதை யும் இரத்தத்தில் தோயச்செய்தாள் என்றும், மனித இரத்தமும் வாற் கோதுமைக்கள்ளும் கலந்த ஏழாயிரங்குடம் மதுவை இவளுக்கு ஊட்டிய பின்னே வெறிமயக்கால் தன் அழித்தற்றொழிலை நிறுத்தினள் என்றும் பண்டை எகிப்தியர் நம்பினர். இவளைப் போர்த்தெய்வமாகக்கொண்டமை யால் இவளுருவம் கையில் அம்பும் வில்லும் பிடித்தபடி இருக்கும். கீழே எகிப்தில் வழங்கிய பெரிய பெண்தெய்வம் நேயித்து என்று சொல்லப்பட் டது. இவள் சூரியனுக்கும் தாய் எனப்பட்டாள். அசீரியர் பபிலோனிய ருடைய இஷ்டர்எனும் மகாதேவியும் நிலமடந்தையின் குணங்குறிகள் உள்ள வளே என்ப.

நிலமடந்தை வழிபாடு நிலவிய நாடுகளிலிருந்துவந்தோராம் என நாம் நன்குரக ஊகிக்கக்கிடக்கின்ற திராவிடர் நெடுங்காலம் நிலையாகக்குடிகொண்ட பரதகண்டத்திலே தான் அவ்வழிபாடு அறியப்படாதகாலந்தொட்டு ஆழமாய் வேரூன்றி இன்றைக்கும் பலவிடங்களில் நடைபெறுகின்றது. அவளுடைய ஆலயங்களை இந்தியாவெங்கணும் சகல பட்டணங்கள் பட்டிக்காடுகளிலும் காணலாம். அவளே பூலோகமாதா, மகாதேவி. காளிவழிபாட்டையும் இரத்தப்பலிகளையும் எடுத்துச்சொல்லவேண்டியதில்லை. இவ்வாராதனத்தில்

---

* Ibid I 52 † Ibid.

நின்று பிற்காலம் எழுந்த தத்துவக்கொள்கை முன்பு பிரகிருதியாகவும் பின்பு சக்தியாகவும் வந்தது. நிலமடந்தை கற்பிதமான ஒரு தெய்வமே யாயினும் கடவுட்பத்தியை இயல்பாகக்கொண்ட நம்மவர்கள் அவளைத் தற் காலம் எண்ணிக்கையில்லாக் கிராமதேவதைகளாக்கித் தொழுவார்கள். இத் தேவதைகளெல்லாம் தத்துவார்த்தத்தின்படி சக்தியின் பல பேதங்களாகக் கொள்ளப்படும். கிராமதேவதைகளுக்கு ஆரியப்பிராமணர் இன்றிப் பழைய தமிழ்க்குலங்களில் உள்ளோரே சமய ஆசாரியர்களாய்ப் பணிவிடைசெய் கின்றமையும் இத்தெய்வங்கள் திராவிடருக்கே உரியவை எனக் காட்டும் எனலாம். உள்ளபடி, திராவிடருடைய வழிபாட்டிற்போல் ஆரியருடையதில் பெண்தெய்வம் எப்போதாவது தலையிடத்தை வகித்ததில்லை. பிருதிவீ எனும் அவர்களது நிலத்தெய்வத்துக்கும் திராவிடருடைய அம்மன்தெய்வத் துக்கும் இடையில் வெகு வேற்றுமையுண்டு. இருக்குவேதத்தில் மகா தேவிக்கு ஒப்பான ஒரு பெண் தெய்வம் சிலதடவை தனித்தும், சிலதடவை வானத்தோடொட்டியும் குறிக்கப்பட்டிருத்தல் * ஆரியருடைய ஆதிக்கொள்கை களுக்கு ஒரு சான்று ஆகாது. பிற்காலம் அன்னோர் காளி (கரியவள்) என உருவம்மாறிய திராவிட தெய்வத்தை ஏற்றுக்கொண்டதுபோல், ஆதிகாலத் திலும் திராவிடரிடம் இருந்தே தங்கள் பெண்தெய்வக்கொள்கையைக் கிரகித்தனர் என நம்ப இடமுண்டு.

நிலமடந்தையினின்று உண்டான சக்திக்கொள்கை சின்னஆசியாவிலும் பிற மத்தியதரைக்கடற்பிரதேசங்களிலும் முன்னாளில் இருந்தமைக்குப் போதியசான்றுகள் உள. இன்றைக்கு இந்தியாவில் சக்தியானது சிவபிரா னோடு ஒன்றுயுள்ள ஒருவன்மையாம் எனும் அழகிய போதகம் வழங்கு கின்றது. பழையநாட்களிலோ சக்தியானது உலகமாதா என்ற அளவில் எல்லா உயிர்களுக்கும் தெய்வங்களுக்கும் மேற்பட்ட ஒருபொருளாய்வைக் கப்பட்டது. அப் பெண்பாற்பொருளோடு ஒற்றுமைபூண்டதும் அதினின்று எழுந்ததுமான ஒரு ஆண்பாற்பொருளும் உண்டு. அது இளமைபொருந்திய தாய்ப் பெண்தெய்வத்தின் மகவாய் விளங்கியது. கொற்றவையும் முருகனும் எனப் பிற்காலத்துத் தமிழ் இலக்கியங்களும் குறிப்பிடுகின்ற இவை இரு

* Macdonell and Keith Vedic Index II P. 7

தெய்வங்களையும் திராவிடருக்கு ஒருகால் தாயகமாய் இருந்தது என நாம் ஊகிக்கத்தக்க பிறவிடங்களிலும் காண்கின்றோம். "பியூனிக் ஆபிரிக்காவில் தனித்துவும் அவள் குமாரனும், எகிப்தில் ஈசிசும் ஹோரசும், பினிசியாவில் அஷ்டரோத்தும் தம்முசும் (= அடோனிஸ்), சின்ன ஆசியாவில் கிபேலெயும் அத்திசும், கிரேக்கில் றேயாவும் சேயுசும் என எங்கும் ஒரு பெண்தெய்வத் தோடுகூட இளம் ஆண் தெய்வமும் ஒன்று சொல்லப்படுகின்றது. பெண் தெய்வம் மணஞ்செய்யாதவள்; முன்பு தன்னோடுள்ள ஆண்பாலைக் கன்னி யாயிருந்து பெற்றவளாகவும் பின்பு தன் குமாரன்மூலமாய் எல்லாத்தெய்வங் களுக்கும் உயிர்கள் அனைத்துக்கும் தாயாகவும் கருதப்படுவாள். இவ்வாதிக் கொள்கைகளுக்கு ஒரு ஞாபகமாய் அவளது வழிபாடுகளில் (முக்கியமாய் அதிகதத்துவார்த்தம் பொதிந்தவற்றில்) உண்மைமணத்தையும் ஆண்பெண் எனும் வேற்றுமையையும் அழித்துப்போடுகின்ற சடங்காசாரங்கள் கைக் கொள்ளப்பட்டுவந்தன. * "இவற்றோடு இந்தியாவில் இன்றைக்கும் நடக் கின்ற சக்திவழிபாட்டை ஒருபுறத்திலும், காளி முருக வழிபாடுகளை ஒருபுறத் திலுமாக வைத்துநோக்குவோமாயின், அடிப்படையில் ஒரேகொள்கைதான் பிரகாசிப்பதாகும்.

## "ஆண்" எனும் பழந்தெய்வம்.

பண்டை இந்தியாவில் வழிபாடடைந்த ஆண்தெய்வமும் மத்தியதரைக் குலங்களது ஆண்தெய்வத்தோடு உறவுபூண்டதே எனத் தோன்றும். மொஹெஞ்சோதரோவில் அகப்பட்ட ஒரு சித்திரத்தகட்டில் ஆண்தெய்வம் ஒன்று விளங்குகின்றது.† அது மூன்றுமுகம் உள்ளது. (பின்புறத்தில் நாலா வது ஒருமுகம் காட்டப்படாதிருக்கலாம்.) அது, நமது நாட்டில் இன்றைக்கும் வழங்கும் வடிவமுள்ள ஒருதவிசின்மேல் அட்டணைக்கால் கூட்டியும் கைகளை நீட்டி முழங்கால்மேல்வைத்தபடியும் உட்கார்ந்திருக்கின்றது. மணிக்கை தொடக்கம் தோள்வரையும் கைவளைகள் விளங்குகின்றன. மார்பில் ஒரு முக்கோணப்பதக்கம் அல்லது ஒன்றாய் இணைத்த மணிவடங்கள் தொங்கு கின்றன. இதுதான் ஒருவேளை பிற்காலத்துச் சாக்தருடைய கவசத்தின் உற்பத்தியாகலாம். இதுபோன்ற ஒரு அணி பலுச்சிஸ்தானத்திற் கண் டெடுத்த பிற்கால உருவத்திலும் காணப்படும். அதுநிற்க; தகட்டிலுள்ள உருவத்தின் கீழ்ப்பாகம் உடையின்றிக்கிடக்கின்றது. அரையிற் சுற்றிய ஞாணின் தொங்கலோ அன்றி ஊர்த்துவ்மான ஆண்குறியோ கீழே காணப்

---

* Hogarth cited in Marshall I P. 18.

† Marshall I P. 33 - 36.

படுகின்றது; தலையில் அமைந்த பாகையின் இரு மருங்கும் வளைந்தகொம்புகள் முளைத்திருக்கின்றன. உருவத்தின் வலப்பக்கத்தில் யானையும் புலியும், இடப்பக்கத்தில் காண்டாமிருகமும் எருமையும் நிற்கின்றன. ஆசனத்தின் அடியில் இரு மான்கள் தலையைப் பின்புறமாகத்திருப்பித் தங்கள் நெடிய கொம்புகள் நடுவிடத்தை நாடவைத்துக்கொண்டு நிற்கின்றன. தகட்டின் தலைப்பில் உருவெழுத்தால் அமைந்த ஒரு வாக்கியம் உண்டு. அதில் நந்தூர் எனப்பட்ட. மொஹெஞ்சோதரோவின் ஆண் எனும் தெய்வம் குறிக்கப்பட்டுள்ளதாக ஹிறஸ்சுவாமியார் எனும் ஆராய்ச்சி நிபுணர் கூறுவர். *

சுமேரியருள் வழிபாடடைந்த அனு ( Anu=ஆணு ) எனப்பெயர் கொண்ட தெய்வமும் இதுவும் பெயராளவில் ஒன்றே எனலாம். இத்தெய்வத்தின் குணங்குறிகளுட் பல மத்தியதரைக்குலங்களின் தெய்வங்களுடையனவற்றோடு ஒற்றுமைப்படுகின்றன. இது மிருகங்களின் மத்தியில் இருத்தல்போலக் கிரேத்தாதீவின் ஆண் பெண் தெய்வங்கள் சிங்கங்கள் அல்லது சிவிங்கிகளின் மத்தியில் விளங்குகின்றன. அத்தெய்வங்களை மிருகங்களின் தலைவன் தலைவி எனச் சொல்லுவர்.† அனத்தோலியாவின் கிபெலே தெய்வமும் சிங்கங்களின் நடுவே அமைக்கப்பட்டது. பிற்காலச் சிவனுக்குப் பசுபதி எனும் நாமம் வந்தமை மொஹெஞ்சோதரோ த்தெய்வம்மிருகங்களின் நடுவில் இருந்ததை அனுசரித்தேபோலும். இத்தெய்வத்தின் கொம்புகளும் நோக்கத்தக்கன. சுமேரியாவிலும் பபிலோனியாவிலும் மனுஷத் தலையிற் கொம்பு வைத்தல் தெய்வத்துக்குக் குறிப்பாயிருந்தது. தெய்வத்தன்மையுள்ளவர்களாய்க் கருதப்பட்ட அரசர்கள் சமய ஆசாரியர்களுக்கு அவ்வாறே கொம்பு கொடுக்கப்பட்டது உண்டு. இம்முறையை ஒட்டி,மொஹெஞ்சோதரோவில் வேறு ஆளுருவங்களும் கொம்போடு விளங்கக்காணலாம். (ஆண்)தெய்வத்தின் கொம்புகளும் தலையணியும் சேர்ந்து பிற்காலத்துத் திரிசூலமாய்வந்தது என்பது சிலர் கருத்து. இது பிற்காலம் சிவபிரானுக்குச் சிறந்த அறிகுறியாயிருந்து அப்பால் வெவ்வேறு ரௌத்திர் சங்கமர் ஆதிய கிளைச்சமயிகளால்மட்டுமன்று, பௌத்தராலும் தங்கள் புத்ததர்மசங்கம் எனும் திரிரத்தினங்களுக்கும் இலாஞ்சனையாக்கப்பட்டது என்ப.

"ஆண்" தெய்வவுருவம் மூன்றுமுகம் உள்ளதெனில், அதுவே பிற்கால மும்மூர்த்திகளின் உருவத்துக்கு‡ அடிப்படையாயிற்றெனலாம். அல்லது

* Sardesar Commemoration Volume, P. 225.
† Cf Autran op cit. p. 99
‡ See Gopinath Rao Elements of Hindu Iconography p. p. 360—366.

மும்முகவுருவம் முற்பட்டகாலத்து மூன்று வெவ்வேறு தெய்வங்களை ஒன்று கூட்டியவடிவமும் ஆகலாம்.* மூவர் ஒன்றான தெய்வவுணர்ச்சி மெசொப் பொத்தாமியாவில் ஸின் ஷமஷ் இஷ்டர் என்றும், அனு என்னில்வ்ய என்றும் சொல்லப்பட்ட தெய்வத்தொகுதியிலும் விளங்குகின்றது. இந்தியாவிலே பின்வந்த ஆரியருள்ளும் இது அக்கினி இந்திரன் சூரியன், பூ புவர் சுவர் ஆதிய மும்மைகளிற் காணப்படும். இன்னும் பிற்பட்டகாலத்துப் பிரமா விட்டுணு உருத்திரன் எனும்மும்மையும் கவனிக்கத்தக்கது. "ஆண்" தெய்வம் நான்குமுகம் உள்ளதேயாக அதன் பின்முகம் தகட்டில் காட்டப்படாத தெனில், நான்குமுகம் உள்ளதாகக் கருதப்பட்ட பார்சிகருடைய செர்வன் தெய்வத்தோடு இது ஒப்புநோக்கப்படத்தக்கது. செர்வன் (Zrvan) எனும் சொல் செண்ட் பாஷையில் காலம் எனும் பொருள் உள்ளது. ஒருவேளை அது கிழவன் என்ற தமிழ்ச்சொல்லோடு ஒப்புமைகொண்டதாகலாம். அத் தெய்வத்தின் நான்குமுகங்களும் காலம் ஒளி வன்மை அறிவு எனும் நான்குக் கும் குறிப்பாம் என்பர்.† பிற்காலத்துச் சிவனுக்குக் காலன் எனும்பெயரோடு நான்குமுகங்களும் சொல்லப்பட்டதை மகாபாரதத்திலே திலோத்தமைகதை யால் அறியலாம். சிவலிங்கங்களும் பலமுறை நான்குமுகங்களோடு ஆக்கப் படுகின்றன. இவை தற்காலம் நாற்றிசையும் பார்த்தறியும் தெய்வத்திற்குக் குறிப்பு என்பர். மொஹெஞ்சோதரோ "ஆண்" தெய்வம் நான்குமுகம் உள்ளதாயின் இருமருக்கிலும் உள்ள நான்கு மிருகங்களும் அவ்வத்திசை யைக் குறிப்பனவாகலாம். சாரநாத்திலிருக்கும் அசோக தம்பத்தின் மேல் நாற்புறமும் உள்ள யானை சிங்கம் எருது குதிரை எனும் மிருகங்கள் நாற்றிசையையும் குறிக்கின்றமையும் நோக்கத்தக்கது.

"ஆண்" தெய்வம் யோகநிலையிலிருப்பதுபோலத் தோன்றுகின்றமை யையும் ஆராய்ச்சியாளர் குறித்திருக்கின்றார்கள். பிற்காலத்தார் சிவபிரானை யோகியாய்க்கருதும்முறைமை இதில் நின்று எழுந்ததுபோலும். இந்த நிலையில் பின்னும் இரு உருவங்கள் மட்கலமுத்திரை இரண்டிற் காணப் பட்டன. இவற்றில் தெய்வத்தின் இருபுறமும் ஒவ்வொரு நாகம் விண்ணப் பஞ்செய்யும் மேரையாய்க் குறித்திருக்கிறது.‡

[தொடரும்]

---

* Marshall ibid I 53 மொஹெஞ்சோதரோவில் மூன்று மிருகங்களை ஒன்றுகூட்டிய முத்திரையும் ஒன்று கிடைத்தது. (Seal No. 382 ibid )

† Autran: Mithra-Zoroastre p. 87.

‡ Marshall, plate 116,29-118, 11.

ஸ்ரீ:

# மதிப்புரை

பரதசேனாபதீயம்:—இது சென்னை அடையாற்றுக் கலாக்ஷேத்திரவெளியீடாகும். விலை ரூ 1-4-0. வேண்டுவோர் அடையாற்றுக் கலாக்ஷேத்திர மானேஜரவர்களிடம் பெறலாம்.

ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய டாக்டர் வே. சாமிநாதையரவர்கள்பெயரால் அடையாற்றில் நூல்நிலையம் அமைந்தபிறகு இதுவே அதன் முதல் தமிழ்ப்புத்தகப்பதிப்பாக வெளிவருகின்றது. இதன் பழம்பிரதி ஐயரவர்களிடம் இருந்ததேயாம். இந்நூல் இக்காலத்து மிக அருகிவழங்கும் பரதநாட்டியக்கலைபற்றிய சில விவரங்களைத் தமிழ்ப்பாடல்களில் உணர்த்துகின்றது. இதற்கு ஒரு பழையவுரையும் உண்டு. நூலாசிரியர்பெயரேனும் உரையாசிரியர்பெயரேனும் இதுகாறும் தெளிவாக அறியப்படவில்லை.

பரதநாட்டியக்கலைக்குப் பாயிரமளவாகவே அமைந்து முழுவதும் முற்றுப்பெறுதநிலையிலுள்ள இந்நூல், அகவற்பாக்களாலாகிய அறுபத்தாறு சூத்திரங்கொண்டது. பழையவுரையேயன்றிப் புதிதான ஒரு குறிப்புரையும் இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது படிப்பவர்க்கு மிகவும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

சிலப்பதிகார அடியார்க்குநல்லாருரையிலே மேற்கோளாக ஆளப்பட்ட பரதசேனாபதீயம் என்னும் பழந்தமிழ்நூலின் இது வேறானதென்று இப்புத்தகத்தின் முகவுரையால் விளங்குகிறது. நல்ல ஆராய்ச்சிமுறையில் இதன் முகவுரையையும் குறிப்புரையையும் எழுதியுதவி அரம்பையின் கீழ்க் கன்றும் கனியுதவல்போலத் தம் தந்தையார் மேற்கொண்ட தமிழ்ப் பணியைத் தாமும் விடாது நடத்திவரும் ஸ்ரீ. S கலியாணசுந்தரையரவர்களுடைய கடப்பாடு பெரிதும் வியந்து பேணுதற்குரியதென்பது சொல்லாமலே விளங்கும். இப்புத்தகத்திற்கு அழகிய முன்னுரையெழுதி அச்சிற்கு வேண்டும் பொருளுதவியும் புரிந்த கலாக்ஷேத்திரத்தின் அதிபர் ஸ்ரீமதி ருக்மணிதேவியாரவர்களின் தமிழார்வமும் கலையன்பும் எந்நாளும் உலகிற்கு உறுபயன்விளைக்குமாறு இறைவன் அருள்புரிக.

நான்மணிக்கடிகை :— தமிழ்ப்பதிப்பகவெளியீடு 1. பதிப்பாசிரியர் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் ராவ்ஸாஹிப் திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள். விலைரூபா. 1—4—0. கிடைக்கும் இடம்:—சக்திகாரியாலயம், சென்னை அல்லது மதுரை.

இது, பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்று; விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது. இதற்குப் பழையவுரை உண்டு. இந்நூல்மூலமும் பழையவுரையும் இதுவரை பலரால் பலமுறை பதிக்கப்பட்டுள்ளனவேனும், இத்தமிழ்ப்பதிப்பகவெளியீடு, பல அச்சுப்புத்தகங்கொண்டும் ஏட்டுப் பிரதிகொண்டும் ஒப்புநோக்கித் திருத்தப்பெற்றது என்றும், பதிக்கும் முறையில் நூதனமான சில நியமங்களை மேற்கொண்டு செய்யுட்பொருளை எளிதில் விளக்க முயல்வது என்றும் தெரிகிறது. இதிற்கண்ட சிலதிருத்தங்கள் மேலும் சில ஏட்டுப்பிரதிகளோடு ஒப்புநோக்கி ஆய்ந்து முடிவுசெய்யத் தக்கனவாய் உள்ளன. பதிப்புமுறையில் மேற்கொண்ட நியமங்களும் எல்லார்க்கும் உடம்பாடாகா. அந்நியமங்களில் அடங்காதனவும் மாறுபடுவனவும் இப்பதிப்பில் உள. எனினும், நூலும் உரையும் திருந்தி எல்லார்க்கும் எளிதிற் பொருள்விளங்குமாறு அமைந்து திகழவிரும்பும் பதிப்பாசிரியர் நன்னோக்கம் பாராட்டத்தகும்.

---

பழநித்தலவரலாறு (வசனம்) :— இது, பழநித்தலசம்பந்தமாய் அறிய வேண்டியவற்றையெல்லாம் ஆராய்ச்சிமுறையில் நன்குவிரிப்பது; திருவாளர் பண்டிதமணி மஹாமஹோபாத்யாய மு. கதிரேசச்செட்டியாரவர்களால் முன்னுரையும், திரு. சி. கே. சுப்பிரமணியமுதலியாரவர்களால் அணிந்துரையும் எழுதியுதவிச் சிறப்பிக்கப்பெற்றது. இத்தலவரலாற்றினையும் இதில் உள்ள மூர்த்திகளையும் ஆங்காங்கு அழகிய சித்திரபத்திரங்களாலும் விளக்குவது. சமயவளர்ச்சிக்கு மிகவும் பயன்படத்தக்கது. இதனைப் பின்பற்றி இம்முறையே பல தலவரலாறுகள் எழும்படி சிறந்த முறையில் இவ்வரலாற்றினையெழுதிவெளியிட்டுதவிய பழநி ஸ்ரீ. தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தான நிருவாகப்பொறுப்பாளர் திரு. ஜெ. எம். சோமசுந்தரம்பிள்ளையவர்களுடைய கடமையாற்றுந்திறமும் தமிழ்ப்பற்றும் சமயப்பற்றும் பாராட்டற்பாலன. இதன்விலை. அணா—10. வேண்டுவோர் பிள்ளையவர்களிடம் பெறலாம்.

---

**கோட்டையூர்த்தலவரலாறு (வசனம்):—** இது முதலில் இத்தலவிஷயமான தேவாரமும் திருப்புகழும் உடையதாய்ப் பின் முறையே இத்தலமுள்ள பிரதேசவிவரமும், இதன் பிறபெயர்களும் அப்பெயர்க்காரணமும், கோயிலின் பெயரும் அப்பெயர்க்காரணமும் பொருளும், அதன் அமைப்பும், மூர்த்திகளின் விவரமும், தீர்த்தங்களும் அவையுள்ள இடங்களும், தலவிருட்சமும், தலத்தின்பழமையும் சிறப்பும், தலவிஷயமான நூல்களும் அவற்றை இயற்றியோர்பெயர்களும், கொட்டையூர் அல்லது ஏரண்டபுரம் என்று வழங்கும் தலவரலாறும், ஏரண்டமுனிவர் பிலம்புக்க காவிரியை வெளிக்கொணர்ந்தவரலாறும், கோடீச்சரமான வரலாறும், தேவிபெயர் முதலியனவும், இத்தலமூர்த்திதீர்த்தமான்மியத்தால் திரிகர்த்ததேயத்தரசன் மகன் சாபவிமோசனமெய்தி வீடுபேறடைந்ததும், இத்தலவிஷயமான நன்கொடைகளும், அவற்றை வழங்கிய உதாரசீலர்களின் பெயர்முதலியவிவரங்களும், இங்குநிகழும் விழாக்களின் விவரமும், ஆலயநிர்வாகம் நடைபெறுமாறும், ஆலயத்துப் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களின் விவரமும் ஆதியவற்றைச் சுருங்க விளக்கியெழுதப்பெற்றது. எழுதியவர்: திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள். வெளியிட்டவர்: குடந்தை மேலக்காவேரிக் கற்கண்டு மண்டிச் சொந்தக்காரரும் இத்தலத்துக் கோடீச்சரப்பெருமானுலய நிருவாகத்தலைவரும் ஆன திரு. V. S. குஞ்சிதபாதஞ்செட்டியாரவர்கள். விலை அணு 4. வேண்டுவோர் செட்டியாரவர்களிடம் பெறலாம்.

---

**வீரசக்தி:—** இது கோயமுத்தூரிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதனுள் உலகியலும் அரசியலும்பற்றிய கட்டுரைகளும் சிறுகதைகளும் பூதபௌதிக ஆராய்ச்சிகளும் காவியவிமரிசங்களும், ஆசியக்குறிப்புக்களும் புதியகவிகளும் பிறவும் வெளியிடப்பெறுகின்றன. அவை பெரும்பாலும் படிப்போர் விரும்பிப்படிக்கும்முறையில் உணர்ச்சியூட்டுவனவாய் உள்ளன. இதன் ஆசிரியர்: திரு. கோ. நீ. அண்ணுமலையவர்கள். வருடச்சந்தா: ரூ. 6. தனிப்பிரதி விலை அணு 4. கிடைக்குமிடம்: வீரசக்திகாரியாலயம், கோயமுத்தூர்.

கலைசைச்சிலேடைவெண்பா (முன்னைம்பது) மூலமும் உரையும்:— இந் நூல் உரையுடன் முன்னம் பலரால் பலமுறை பதிக்கப்பட்டுளது. எனினும், இதுபொழுது சென்னைப் பல்கலைக்கழகத்து வித்வான்பரீக்ஷைக்குப்பயிலும் மாணவர்க்கு உபயோகமாகும்படி திரு. இராமசுப்பிரமணியநாவலரவர்க ளால் பதவுரையும், அருஞ்சொற்பொருள் அவற்றுக்கு மேற்கோள் பதசாரம் முதலிய விசேடவுரையும், இடையிடையே பயின்ற வரலாறுகளின் விளக்கமு மாக இவ்வுரைப்பதிப்பு வெளியிடப்பட்டதாகத்தெரிகிறது. இதனுள், 16-ஆம்பக்கத்து 18-ஆம் பாட்டின் உரையும், 40-ஆம் பக்கத்து 50-ஆம் பாட்டின் உரையும் அபூர்த்தியாயுள்ளனவும், முதற்பக்கத்து 27-ஆம் வரி யில், 'தொட்டிக்கலை என்பது கலைசை என்று மருவிற்று' எனவும், 4, 5-ஆம் பக்கங்களில் 3-ஆம் பாட்டின் 3-ம் அடியில் வெற்றிமதிக்கண்ணியான் என்ப தற்குப் பொருள் வரைந்தபின் மீட்டும் 'யான்' எனவும், 5-ஆம்பக்கத்து 27-ஆம் வரியில் 'பாவலரும் (உம்)' எனவும், 8-ஆம் பக்கத்து இரண்டாம் வரியில் 'இருபெயரொட்டிக்கலுமாம்' எனவும், 18-ஆம் பக்கம் 18-ஆம் வரியில் 'கால்பெற்றுநிற்கும் ஏனைமுளைகள்' எனவும் காணப்படுவனவும், அவைபோல்வன பிறவும் மறுபதிப்பிலே திருந்தத்தக்கனவாக உள்ளன.

இதன் விலை: அணா 6. கிடைக்குமிடம்: செந்தமிழ்நிலையப்பதிப்பகம், பத்மநாபபுரம், தக்கலைபோஸ்டு, தென்திருவாங்கூர்.

---

பைந்தமிழ்:— இது திருநெல்வேலிஜில்லா காரைக்குறிச்சியிலிருந்து வெளிவரும் ஒரு திங்கள்மலர். இதன் ஆசிரியர் திரு. ஆ. முருகவேள் என்பார். இதனுள் புதியவும் பழையவுமான சிறுகதைகளும் ஆராய்ச்சிகளும் நீதிவாக்கியங்களும் புதியகவிகளும் முதலியவை காணப்படுகின்றன. இதன் ஆண்டுச்சந்தா ரூபா. 2—4—0. வேண்டுவோர் திருநெல்வேலிஜில்லா, காரைக்குறிச்சிப் பைந்தமிழ்க்காரியாலயத்திற் பெறலாம்.

---

# கம்பராமாயணசாரம்

## உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

௧0௨-ஆம்பக்கத் தொடர்ச்சி.

### ௧௬-வது சம்புவன்வதைப்படலம்

சூத்திரனை சம்புவன் தவஞ்செய்ததற்காக அவனை இராமன் கொன்றதைக் கூறுவது.

### சத்துருக்கன் மதுபுரியினின்று வந்து இராமனைக்கண்டு திரும்புதல்.

சத்துருக்கன், மதுபுரியிலிருந்து பன்னிரண்டாண்டு அரசு செய்தபின், தன்சேனையை அங்கே காவலாகவைத்துவிட்டுத் தான் இராமனைக் காணவிரும்பிப்புறப்பட்டு, வான்மீகிவனத்தை அடைந்தான். அம்முனிவன், அவனுக்கு விருந்திட்டு உபசரித்து 'இலவணனைக் கொல்லவேண்டுமென்ற எங்களெண்ணத்தை நிறைவேற்றினாய்' என்று நன்றிகூறி, இராத்திரிப்பொழுதுபோகும்படி புண்ணிய கதைகள் கூறினான். மறுநாள் விடிந்தபின் சத்துருக்கன், பிரயாணத்தைத் தொடுத்துச்செய்து அயோத்திநகரையடைந்தான். அந்நகரமாந்தர் எதிர்கொண்டு வரவேற்க, நகருட்சென்று, இராமனைக்கண்டு வணங்கினான். வணங்கின தம்பியை இராமன், வாரியெடுத்து மார்போடணைத்து இறுகத்தழுவி, 'அக்காலத்தில் இலக்குமணன் உதவியால் இராவணனைக் கொன்றும் இக்காலத்தில் உன் துணையினால் இலவணனைக் கொன்றும் பகைமுடித்தேன், இனிப் பகையில்லை' என்று, இவ்வாறாகஇரவும் பகலும் சத்துருக்கன் வலிமையைப் புகழ்ந்து பாராட்டினான். பின்பு, 'நீ, உன்சேனையையும் செல்வத்தையும் அங்குவிட்டு இங்குவைகுதல் நன்றன்று' என்று விடைகொடுக்கச் சத்துருக்கன் திரும்பி மதுபுரியையடைந்தான்.

## ஒரு பார்ப்பனச்சிறுவன் மரிக்க அவன் தாய்தந்தையர் வருந்துதல்.

சத்துருக்கன் போனபின்பு ஒருநாள் மிகவும் முதிர்ந்த வயதுடைய பார்ப்பனனொருவன், தன் இறந்தமகனை யேந்திக் கொண்டு மனைவியுடன் இராமனரண்மனைவாயிலையடைந்து, அலறி ஓலமிட்டான். பார்ப்பனி, இறந்த மகனைநோக்கி 'என் கண்மணியே! என் ஆருயிரே! அமிழ்தமே! உன்னைப் பலநாள் பேணிவளர்க் கும் பணிசெய்த எனக்கு நீ செய்யும் பணியைப் பாராத துன்ப முறச்செய்தாயே! முன்செய்த புண்ணியத்தால் உன்னைப்பெற்றுப் போற்றி வளர்த்தேன். இன்று உன்னை இழந்தேன். (உன்னை இழக்காமல் வைத்திருக்கும்) விதியிலேன் (ஆதலால்) ஒப்பற்ற பொன்னைப்பெற்று (அது) தவறிப்போகும்படி, முடிந்துவைத்தவர்போன்றேன்.* என்னைப் போலும் பாவிகள் உண்டோ! சதங்கையும், தண்டையும் அரைநாணும் காப்பும் பூணூலும் ஐம்படையும் காறையும் தோடும் பட்டமும் சுட்டியும் அணிந்து விளங்கிய என் உயிர்த்துணையே! கருணை யில்லாத இராமன்நாட்டிற் பிறந்தாயாதலால், இறந்தாய்! "புத்திர சோகம்போ யொழியும்படி செத்துப்போகாத தாய், நாய்" என்று உலகோர் பழிதூற்றும்படி உயிரோடிருக்கின்றேன். என்னைக் கை விட்டுச்செத்துப்போன நீயோ, (செத்து) உன்னைப்பின்தொடாராத நானோ, அபயமிட்டாருக்கு அடைக்கலமளிக்க வாராத அரசனோ, யார் வன்னெஞ்சர்? எல்லாத்துன்பங்களுக்கும் இருப்பிடமானேன்!

---

* முன்னைச் சென்மத் திட்டுடை யேனு தலின்மோகத்
துன்னைப் பெற்றுப் போற்றி வளர்த்தின் றுனைவிட்டேன்
என்னைப் போலப் பாவிகள் உண்டோ! இணையில்லாப்
பொன்னைப் பெற்றுத் தப்ப முடிந்தேன் பொறியற்றேன்.

முன்னைச்சென்மத்து - முற்பிறவியில். இடுதல் - கொடுத்தல். இட்டு உடையேனுதலின்-(இல்லாதவர்க்கு வேண்டியவற்றைக்) கொடுத்து (அந்தக் கொடையினுலாகியபுண்ணியத்தை) உடையேனுயிருந்ததனுல். மோகத்து - ஆசையோடு. விட்டேன் - (என்னைவிட்டுப்) போகவிட்டேன் (தமிழகராதி).

பாவி யமன் என்னைக் கொண்டுபோகின்றானில்லை' என்று ஆறாத துக்கமுடையவளாய், அலறிப் புலம்பினாள். மனைவி தரையில் விழுந்து புரண்டு தவித்துப் புலம்புதலைக்கண்டு கணவன், பொறுக்கமாட்டாதவனாய் மகன்மீதுவிழுந்து பேச்சுமூச்சற்றுக் கிடந்து சிறிது நேரஞ்சென்று தெளிந்து வாய்விட்டுப் புலம்புவானானான்:—

'கல்நெஞ்சராயுள்ளோர், மக்களையிழந்தால், வாய்விட்டுக்கதறுவார்கள்; மெல்லியநெஞ்சராயுள்ளோர் துன்பம்தாங்கமாட்டாமல் உயிரைவிடுவார்கள். என்னை முழுதுங் கைவிட்டு என்நெஞ்சிலே தீயைமூட்டிய உன்னைப்போல நான் வன்னெஞ்சனல்லேன். இப்போதே இறந்து உன்னைத் தொடர்ந்துவருகின்றேன்.* உன்னையிழந்ததனால் மனந்தளர்ந்து துன்பம்பெருக உன் தாயும் நானும் மறுகும் மறுக்கம், மலடருக்கில்லை. ஆதலால், துன்பம் வாராதபடி விலக்கவிரும்புவோர்(க்கு நான்கூறும் புத்திமதி யாதெனில், அவர்கள்) பிள்ளைபெறுதொழிவாராக (என்பது. நான் இறந்தபின்பு) நீஎனக்குச் செய்யக்கடவதாயிருந்த நீர்க்கடனை (சலதர்ப்பணத்தை) நான் உனக்குப்பின் உயிரோடிருந்து செய்வேனோ? செய்யமாட்டேன். நான்(இப்போதே இறந்து) உன்னைப்பின்தொடர்ந்துவருகின்றேன்.†

---

*கன்னெஞ்ச ராயுள்ளோர் காளையரைத் தாமிழந்து கதறுநிற்பர்;
மென்னெஞ்ச ராயுள்ளோர் வெந்துயரம் பொறுக்கலா விடுவர் ஆவி
என்னெஞ்சில் எரிமூட்டி என்னையறக் கைவிட்ட உன்னைப் போல
வன்னெஞ்ச னோபானும்? மைந்தனே! உனைத்தொடர்ந்து வருகின் றேனே.

காளையரை - ஆண்மக்களை. பொறுக்கலா - பொறுக்கலா(து) - பொறுக்கமாட்டாமல் - அற - முழுதும். மைந்தன் - மகன்.

†தனக்குநோய் வேண்டாதான் சந்ததிபெற் றிடாதொழிக; தளர்வு மிக்கு
மனக்குநோய் தான்பெருக, மலடருக்கின் றியாம்படுமிம் மறுக்கம் இல்லை
எனக்குநீ செய இருந்த நீர்க்கடன்நான் நின்னிற்பின் இருந்து பிள்ளாய்
உனக்குநான் செய்வேனோ? செய்யேன்காண், உனைத்தொடர்ந்து வருகின்
றேனே.

நோய் - துன்பம். மிக்கு - மிகுந்து. மறுக்கம் - மனக்கலக்கம். பிள்ளாய் - பிள்ளையே. காண் - முன்னிலையசை.

கண்ணில்லாதிருந்தவன் கண்ணைப் பெற்று இழந்தாற்போல(ப் பிள்ளையில்லாதிருந்த) நாங்கள் உன்னைப் பெற்று இழந்து, காந்திப் பொங்குகின்ற புண்ணிலே காய்ச்சிய நாராசம் புகுந்தாற் பிறக்கும் துன்பம்போன்ற இந்தத் துன்பத்தைப் பொறுக்கலாற்றேம். (அப்படித் துன்பமடையும்படி) (வேறெவரும் செய்யாத) பெரும் பாவஞ் செய்த எங்களுக்குப் பிள்ளையாகப் பிறக்க என்னபாவஞ்செய்தாய்? (இன்னகுறையிருக்கிறதென்று) பழித்தற்கிடமில்லாத பேரழகு படைத்த மகனே! பகருவாயாக.* பிள்ளைபெற ஆசைப்பட்டு நெடுங் காலம் அருந்தவஞ்செய்து வருந்தினேன். வருத்தம் நீக்க வந்தாயென்று எண்ணியிருந்தேன். (அந்த எண்ணத்தில் மண்விழும்படி) எங்கே போனாய்? குழந்தையை இழந்து தளர்ந்து உயிரொடுங்குகின்ற என்னைக் கூற்றுவன் கொண்டுபோகான். உன் தோழப் பிள்ளைகளோடு தெருவில் விளையாடி உடம்பு வருந்தி உறங்குகிறாயோ? எழுந்திருப்பாயாக. (எழுந்திரு என்று நான் சொல்லியும் உறங்குகின்றாயே) இது என்ன பேருறக்கம்? மகனே புகல்வாயாக.†

---

*கண்ணிலான் பெற்றிழந்தான் எனஉன்னைப் பெற்றிழந்து காந்திப் பொங்கும்
புண்ணுளே நாராசம் புகுந்தனைய இத்துயரம் பொறுக்க லாற்றேம்
எண்ணிலாப் பெரும்பாவத் தெங்களுக்கு மகனாக என்ன பாவம்
பண்ணினாய் மகனே!என் பழிப்பற்ற பேரழகா பகரு வாயே.

நாராசம் - இருப்புச்சலாகை. புண்ணு (க்கு)ள்ளே புடைத்தல் (-அடித்தல்) பொருந்தாது. 'புகுந்தனைய' என்று பாடம் இருந்திருக்கலாம். 'எண்ணிலா அருந்தவத்தோன்' என்ற பாலகாண்டப்பாட்டில் 'புண்ணிலாம் பெரும்புழையிற்கனல்நுழைந்தாலெனச்செவியிற்புகுத' என வருதல் காண்க.

'இத்துயரம் பொறுக்கலாற்றேம்; எண்ணிலாப் பெரும்பாவத் தெங்களுக்கு' என்பது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஏட்டிலுள்ள பாடம். 'பொறுக்கலாற் றாதே மாகி மண்ணிலாப் பெரும்பாவத் தெங்களுக்கு' என்பது அச்சிடப்பட்ட புத்தகங்களிலே காணப்படும் பாடம்.

† தள்ளாடும் மேனியனாய்த் தனயனைநான் இழந்தாவி தளர்கின் றேனைக்
கொள்ளாது கூற்றுமெனைக் கொடுபோகா தினியுனக்குத் தோழ ராகி
உள்ளார்க ளொடுதெருவில் விளையாடி உடம்பலசி உறங்கி னாயோ?
பிள்ளாய்நீ எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் பேசி டாயே.

மேனி - உடம்பு. தனயன் - மகன். ஆவிதளர்தல் - உயிரொடுங்குதல். கூற்று-எமன். கொடுபோகாது-கொண்டுபோகாது. அலசுதல் வருந்துதல்; சோர்தல். பிள்ளாய் - பிள்ளையே.

நீ கொஞ்சிப்பேசும் குதலைமொழிகேட்கவும் உனக்குக் குடுமிக் கலியாணஞ்செய்துபார்க்கவும் புண்ணியஞ்செய்திருந்த நாங்கள், நீ *முஞ்சியும் முப்புரிநூலும் பூண்டு வேதமோதிவருதலைக் காணும்பாக்கியம் படைத்தோமில்லை. இதுவரையும் இந்த நாட்டில் பெற்றோரிறக்குமுன் பிள்ளைகள் இறந்ததில்லை (இந்த அநியாயம் யாருடைய அரசாட்சியில் நிகழ்ந்ததோ, அந்த இராமன் மீது பழிசுமத்தி நாங்களிருவரும் மாண்டுபோகின்றோம்' என்று பிள்ளையையிழந்த பிராமணன் கதறினன்.

## இராமன்கவலை.

கருணாமூர்த்தியான இராமன், அந்தணச்சிறுவனது அகால மரணத்தையும் பெற்றோர் துயரத்தையும் அவர்கள் தன்னைப் பற்றிக்கூறுங் கொடுஞ்சொற்களையும் கேட்டு மனம் வருந்தி மந்திரிமார் தம்பிமார் முதலானோரோடு வாசலுக்கு வந்து, வருந்திப்புலம்புகின்ற மறையவனுக்கு மறுமாற்றஞ்சொல்லமாட்டாதவனாய்க் கவலையோடிருந்தான். அப்போது, (அவன் கவலையை ஞானதிருட்டியால் அறிந்த)நாரதன் அங்கே வந்தான். அவனை இராமன் அடிவணங்கிப் பூசித்தான்.

## நாரதன் இராமன்கவலையை நீக்கல்.

பூசிக்கப்பெற்ற நாரதன் இராமன் கவலைநீங்கக்கூறியது வருமாறு:—

'உன் இராச்சியத்தில் இதற்குமுன் நிகழாத நிகழ்ச்சியாகப் பார்ப்பனச்சிறுவன் இறந்த காரணத்தைக் கூறுகின்றேன். பிராமணர் முதலிய நான்குவருணத்தாருக்கும் அவரவர்க்குரிய தருமங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. சூத்திரனுடைய தருமம் மேலான மூன்றுவருணத்தார்களுக்கும் பணிவிடைபுரிதலே. அதற்கு மாறாக ஒரு சூத்திரன் தவஞ்செய்வதனால் விளைந்த விளைவு, இந்தப் பிராமணச்சிறுவனுடைய மரணம்' என்று நாரத முனிவன் கூறினன். அதுகேட்ட இராமன், கவலைநீங்கி, இலக்குமணனைநோக்கிப் பிள்ளையிழந்த பிராமணனைத் தேற்றிப் பிள்ளையின்

---

* முஞ்சி-பிரமசாரிகள் தருப்பையாற் பின்னித் தரிக்கும் அரைஞாண்.

உடலை என்னைத்தோணியிலிடும்படிசெய்' என்று கட்டளையிட்டுவிட்டு, இரதமேறி, மேற்குத்திசை வடக்குத்திசை கிழக்குத்திசைகளைச் சுற்றிப்பார்த்துத் தென்றிசைக்குச் சென்றபோது அங்கே ஒரு தாமரைத்தடாகக்கரையிலே தலை கீழாகக் கால் மேலாக வௌவால்போலத் தொங்கிக்கொண்டு தவஞ்செய்பவனைக் கண்டு 'நீ பிராமணனோ, சத்திரியனோ, வைசியனோ, சூத்திரனோ, உண்மையை ஒளிக்காமல் உள்ளபடி உரை' என அவன், 'நான் சூத்திரன். என் பெயர் சம்புவன் என்பது. சரீரத்தோடு தேவலோகத்துக்குப்போவதற்காகத் தவஞ்செய்கின்றேன்' என்றான். உடனே இராமன், உறைவாளை உருவி வீசித் தவசிதலை தரையில் விழும்படிசெய்தான். தவசி(யின் ஆவி), 'ஒருவரம் வேண்டிக்கொள்' என, இராமன், 'இறந்த பார்ப்பனச்சிறுவன் திரும்ப உயிர்பெறல் வேண்டும்' எனத் தவசி, 'பெற்றான்' என்றான்.

### இராமன் அகத்தியன் ஆச்சிரமத்தை அடைதல்.

அப்போது. அங்கே, திருமாலும் இந்திரனும் தேவர்களும் முனிவர்களும் வந்து கூடினார்கள். இராமன் அவர்களுடன் அகத்தியனுடைய ஆச்சிரமத்தை அடைந்தான். திருமால் முதலோர் அம்முனிவனுடைய பூசனையையேற்று விடைபெற்று அவரவரிடங்களுக்குச் சென்றார்கள்.

### அகத்தியன் ஓர் ஆபரணத்தை இராமனுக்கு ஈதல்

பின்பு, 'வெற்றிபெற்ற வில்வீரனே! யாரிடத்தும் எதுவும் பெறாமல் எல்லாருக்கும் கொடைகொடுக்கும் நீ ஏற்றுக்கொள்ளத்தக்கது, விண்ணோராலும் மண்ணோராலும் போதிய அளவு புகழமுடியாதது, பகைவரையெல்லாம் வென்ற நீயே அணியத்தக்கது, இந்தப் பூலோகத்தில் இல்லாததாய்ப் பிரமலோகத்தில் இருந்தது இந்த ஆபரணம். இதைக்கொள்வாயாக' என்றுகூறி ஓராபரணத்தை அகத்தியன் இராமனுக்கு அளித்தான்.

### அகத்தியன் அந்த ஆபரணத்தைத் தனக்குத்தந்தவன்சரிதத்தைச் சாற்றுதல்.

இராமன், 'அந்த ஆபரணத்தை உனக்கு உதவியவன் வரலாற்றை உரைப்பாய்' என, 'நான் தவஞ்செய்தற்குத் தக்க தானத்தைத் தேடித்திரிந்தபோது, மனிதர் மிருகங்கள் பறவைகளில்லாத

ஒரு சோலையை அடைந்தேன். அங்கே, ஒரு தாமரைத்தடாகத் தின்கரையிலே, ஆச்சிரமம் அமைத்து, அதிலே அன்றிரவு தங்கி யிருந்தேன். மறுநாள் விடிந்தபோது ஒரு சவத்தைக் கண்டேன். கண்ட சமயத்தில் மாமுனிவர்கள் சூழ, மாகதர் (புகழ்வோர்) ஏத்த, தும்புரு நாரதர் பாட, இந்திராதிதேவர் போற்ற, வானத்திலே தேர்மீதே ஒரு தேவன் வந்தான். வந்தவன் கீழேயிறங்கி மேலே கூறிய சவத்தினைத் தின்று தடாகத்துத்தண்ணீரை வாரிக் குடித்து வாய்கழுவித் தேரிலேறத்தொடங்கியபோது, 'தேவனே! செத்த உடலைத் தின்றகாரணம் யாது' என நான் விசாரித்தேன். அவன் 'என் பெயர் சுவேதன். என்தந்தை யிறந்தபின்பு, ஆயிரம் ஆண்டு பூமியை ஆண்டு, எல்லாப் பகைவரையும் செயித்தபின்பு என் தம்பிக்கு அரசாட்சியை அளித்துவிட்டு, இங்கேவந்து மூவாயிரம் ஆண்டு தவஞ்செய்தபோது, இந்த ஆபரணம் என் கைக்கு வரப் பெற்றேன். மேற்கொண்டு நெடுங்காலஞ்செய்த தவப்பயனுகப் பிரமலோகத்தையடையப்பெற்றேனுயினும், பெரும்பசியும் தாக மும் என்னை வருந்தச்செய்தன. பிரமன்காலில் விழுந்து வணங்கி, 'பிரமலோகவாழ்வுபெற்றும் பெரும்பசியும் தாகமும் என்னை வருத்துதற்குக் காரணம் யாது? எதனை உண்ணுவது?' என்று கேட்டேன். அவன், 'நீ, உலோபியாய் இரந்தார்க்கு இட்டுண்ணுது, உன்வயிற்றை நிரப்பிவந்ததனுல், பசிநோய் உன்னைப்பற்றியிருக் கிறது. நீ தவஞ்செய்தவனத்திலேயுள்ள உன் பிணத்தைத்தின்று பசிதீர்த்துக்கொள். அது, நீ தின்னத்தின்ன வளராநிற்கும். நீ அகத்தியமுனிவனைக் கண்டபோது, உன் பசிநோய் தீரும்' என்ருன். அவன்கூறியபடியே இன்றளவும் இந்த என் பிணத்தைத் தின்பேனுனேன். என்பசியைத் தீர்த்தருள்வாயாக' என்று வேண்டி ஞன். அவன்பசி அகன்றெழிந்தது, அப்போது "நான் உன்னைத் தெரிசித்து உன் அருள் பெற்றதனுல் நல்வாழ்வுபெற்றேன். இந்த ஆபரணத்தை ஏற்றுக்கொள்க" என்று கொடுத்து விமானமேறி விண்ணேர்சூழச் சென்ருன். இந்த ஆபரணம் என்கைக்குவந்த விவரம் இது' என்று அகத்தியன் கூறினன்.

## தண்டகவன வரலாறு.

'இந்தவனத்தில் மனிதர் மிருகம் பறவை வழங்காதிருப்பதன் காரணம் யாது?' என இராமன் வினவத் 'தண்டன் என்னும் கொடிய அரசன் தன் புரோகிதனான சுக்கிரன் தவஞ்செய்த வனத்தையடைந்து, அவன் மகளைக்கண்டு மயல்கொண்டு "நீ யார் மகள்? உன்பெயர் யாது?" என, அவள் "நான் சுக்கிரன்மகள்; என்பெயர் *அரசை" என்றாள். அவன் அவளை வணங்கி யிரந்து தழுவமுயன்றபோது, அவள் "என் தந்தை சினந்தால், எழுலகும் பொடியாய்விடும். இந்த இடத்தைவிட்டு இப்போதே போய்விடு" என்று சொல்லியதைப் பொருட்படுத்தாமல், அவன் வலாற்காரத்தால் அவளைச் சேர்ந்துவிட்டுப்போனான். அவள் துன்பத்தோடு, தந்தையிடஞ்சென்று, நிகழ்ந்ததைக் கூற, அவன், பெருங்கோபங் கொண்டு, "என்மகளுக்கு என்றும் நீங்காத துன்பத்தைச்செய்த தண்டனும் அவன் சுற்றமும் சேனையும் நாடும் எரிந்துபொடியாய் விழுந்திடுக" எனச் சபிக்க, எல்லாம் எரிந்து பொடியாயின. அந்தத் தண்டன் நாடு, சுக்கிரசாபத்தால், இந்தத் தண்டகவனமாகி, மனிதர் மிருகம் பறவைகள் நண்ணாததாய்த் தவஞ்செய்யும் முனிவர் நெருக்கத்தால் சனத்தானமென்னும் பெயருடையதா யிருக்கின்றது' என்று அகத்தியன் சொன்னான்.

அவனாச்சிரமத்தில், இராமன் அன்றிரவு தங்கி மறுநாள் உதயம் அவனைவணங்கி ஆசியோடு விடைபெற்றுப்புறப்பட்டு அயோத்திக்குத் திருப்பிவந்துசேர்ந்தான்.

கசு-வது சம்புவன்வதைப்படலம் முற்றிற்று

---

* சுக்கிரன்மகள் பெயர் சரையென்று மூலச்செய்யுளிற் காணப்படினும், வடமொழி வான்மீகத்தின் இப்பகுதிக்கு ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீனிவாஸயங்காரவர்கள் எழுதியவசனத்தில் (பக்கம்-235) உள்ளபடி அரசை என்று கொள்ளலாயிற்று.

## கரு-வது அசுவமேதயாகப்படலம்

### இராமன் அசுவமேதயாகஞ்செய்ததைக் கூறுவது;—

### இராமன் அசுவமேதயாகஞ்செய்ய நிச்சயித்தல்.

இராமன் பரதலக்குமணரை நோக்கி 'நான் இராசசூயயாகஞ் செய்யக்கருதுகின்றேன்' என்றான். இலக்குமணன், 'அறியாத சிறியேன் கூறுவதைக் கேட்டருள்வாயாக. பயிர் மழையைநோக்கியும் குழந்தை தாயைநோக்கியும் நிற்றல்போல உலகத்தோரெல்லாரும் உன்னைநோக்கி நிற்கின்றார்கள். அன்றியும் நீ அரசரனைவருக்கும் ஆருயிர்போலிருக்கின்றாய். அத்தன்மையுடைய நீ அவர்களைப் போர்செய்துவென்று அவர்கள் பொருள்களைக் கவர்ந்துகொண்டுவந்து இராசசூயயாகஞ்செய்வதைக்காட்டிலும், அசுவமேதயாகஞ்செய்தல் நன்றென்றெண்ணுகிறேன்' என்றான். இராமன் 'அரசரோடுபோர்புரிந்து அவர்களை வருந்தச்செய்ய வேண்டியிருக்கிற இராசசூயயாகஞ்செய்யக்கருதியதைத் தவிர்ந்து அசுவமேதயாகஞ்செய்வோமாக' என்று கூறினான்.

### குதிரையைப் பூமிவலமாக அனுப்புதல்.

இராமன் எல்லா நல்ல இலக்கணங்களும் அமைந்த ஒரு குதிரையைச் சேனை காத்துச்செல்லப் பூமிவலமாகப் போகவிட்டான்.

### யாகத்துக்குமுன் செய்த ஏற்பாடுகள்.

அசுவமேதயாகத்தை நைமிசாரணியமென்ற தபோவனத்திற் செய்துமுடிக்கும்படி வரவேண்டுமென்று அகத்தியன் முதலிய முனிவர்களனைவருக்கும் அழைப்பனுப்பினான். அந்த வேள்விக்கு வரும்படி குகனுக்கும் சுக்கிரீவன் அனுமன் அங்கதன் முதலிய வானரத்தலைவர்களுக்கும் விபீடணனுக்கும் மற்றெல்லா மன்னருக்கும் திருமுகம்* அனுப்பினான். சத்துருக்கனை அழைத்துவரும்படி தூதரை அனுப்பினான். அழைக்கப்பெற்றவரனைவரும் அயோத்திக்கு வந்துசேர்ந்தார்கள்.

---

* திருமுகம்—பெரியோர் அனுப்பும் கடிதம்.

யாகத்துக்குக் கடல்நீரும் புண்ணியநதிகளின் நீரும் கொண்டு வரும்படியும், யாகம் தொடங்கக் குறித்தநாளுக்கு ஏழுநாள்முன் 'இன்றைக்கு ஏழாம்நாள் நைமிசாரணியத்தில் அசுவமேதயாகம் தொடங்கப்பெறும்' என்று அயோத்திநகரத்திலும் கோசலநாடெங்கும் பறையறையும்படியும் இராமன் கட்டளையிட்டான். யாக சாலையும், முனிவருக்கும் சுக்கிரீவன் விபீடணன் முதலிய மன்னருக்கும் மற்றவர்களுக்கும் விடுதிகளும் அமைக்கும்படி இலக்குமணனை ஏவினன். அவன், நைமிசாரணியத்துக்குச்சென்று, பல ஏர்கள் பூட்டி உழுவித்து நிலத்தைச் சமப்படுத்தி, முனிவர்கள் அரசர்கள் முதலிய எல்லோருக்கும் இராமனுக்கும் இருப்பிடங்களும் யாக சாலையும் அமைப்பித்து, அன்னசாலைகளும் தண்ணீர்ப்பந்தல்களும் சமைத்து, (ஒரு தாற்காலிக நகரமுண்டாக்கி அதன்) வீதிகளில் கதலிகளும் கமுகுகளும் கொடிகளும் நட்டு வெண்மணல் பரப்பிப் பந்தலிட்டுவிட்டுத் திரும்பி அயோத்திக்குவந்து, தான் செய்து முடித்தவைகளை இராமனுக்குத் தெரிவித்தான். இராமன், அளவிறந்த பொன்னும் பசுவும் அரிசியும் பயறும் எள்ளும் மிளகும் நெய்யும் வேறு வேண்டும் பண்டங்களும் கொண்டு பரதலக்குமணர் முன்செல்லும்படி பணித்தான்.

### கோசலநாட்டுமக்கள் அயோத்திக்குவந்து கூடுதல்.

வேள்வியைக் காணவிரும்பிய கோசலநாட்டுமக்கள், பொற்குடங்களும் நெய்விளக்குக்களும் ஏந்தி, அயோத்திநகருக்கு வருவாராயினர். அந்த நகரமாந்தர், வீதிதோறும் குலைவாழைகள் நட்டுத் தோரணங்கட்டி வெண்மணல் பரப்பி வீட்டுவாசலில் விதானமிட்டு (மேற்கட்டி கட்டி)ப் பூமாலையும் முத்துமாலையும் புனைந்த பொற்கும்பம் வைப்பாராயினர். அவர்கள், தங்கள் நகருக்குவந்த நாட்டுமக்களை வரவேற்றுத் தங்கள்தங்கள் வீடுகளுக்கு அழைத்துப்போய் விருந்துபுரிந்து உபசரித்தார்கள். ஆடவர்கள், ஆட்டுக்கடாப்போரும் கோழிப்போரும் காடைப் போரும் கண்டு களித்துப் பொழுதுபோக்கினர்கள். மாதர்கள்

தங்களை ஆடையாபரணங்களால் அலங்கரித்து ஆடவரைத்தாக்கும் கண்ணம்புகளுக்கு அஞ்சனநஞ்சூட்டிக் கண்ணாடிகளிலே தம் அழகைநோக்கிப் போதுபோக்கினார்கள்.

## நைமிசவனத்துக்குச்செல்லும் சனங்கள் கோமதிநதிக்கரையை அடைதல்.

இராமன், நைமிசாரணியத்துக்குத் தான்புறப்படுதற்கு முன்னாகச் சேனை (யில் பெரும்பகுதி) யைச் செல்லும்படி திட்டம் பண்ணினான்.

அவன், அந்த வனத்துக்குப் புறப்படுமுன், அங்கே அவன் செய்யப்போகின்ற வேள்வியைக் காணவிரும்பிய நகரமாந்தரும் நாட்டுமக்களும் அந்த வனத்தைநோக்கிச் சென்றார்கள். அவர்களிலே பெரும்பான்மையோர் காலால்நடந்தும் சிறுபான்மையோர் வாகனமூர்ந்தும் போனார்கள். அவர்களோடு யாகத்துக்கு வேண்டிய பண்டங்கள் நிறைந்த வண்டிகள், கடகடென்று ஒலியுண்டாகச் சென்றன. கரியினால் உருவாகப்பெற்றாற்போன்ற திண்ணிய கருமேனியுடைய சுமைகாரர்கள் இரண்டு முனைகளிலும் சாக்குகள் நிறைக்கப்பெற்ற உறிகள் தொங்கும் காவடியைச் சுமந்துசென்றார்கள்.

அந்தக்கூட்டத்திலே, சென்றகாலச்செயல்களையும் வருங்காலச்செயல்களையும் சேர ஆலோசித்து, இராசகாரியங்கள்முற்றப் பெறச்செய்வோரும் தருமசிந்தையரும் மனக்கலக்கமற்றவரும் மறந்தும் பிழைபடப்பேசாதவருமான மந்திரிகள் சென்றார்கள்.* தேரேறிச்சென்றமாதர்கள் மலைமேலுள்ள மயில்களை நிகர்த்தார்கள். யானைமேற்சென்றவர்கள் மேகத்துமின்னை நிகர்த்தார்கள். குதிரைமீதுசென்றவர்கள் அலைமேல்விளங்கும் அன்னங்கள்போன்றார்கள்.

---

* இறந்த கருமங்கொடு வருங்கருமம் எண்ணிச்
சிறந்த அரசன் கருமம் நாடி அது செய்வோர்,
அறந்தழுவு நெஞ்சினர் அசஞ்சலர் பிழைச்சொல்
மறந்து மொழியாதவர்கள் மந்திரிகள் போனார்.

இறந்த கருமம் - சென்றகாலச்செயல். கொடு - கொண்டு. அறம் - தருமம். சஞ்சலம் - மனக்கலக்கம். அசஞ்சலர் - மனங்கலங்காதவர்.

இருபக்கமும் திரையிட்டு மூடப்பெற்றசிவிகையிற் சென்ற மாதின் முகம், காற்றால் அத்திரை விலகியபோதெல்லாம், மேகத்தில்மறைந்திருந்த சந்திரன் மேகம் கலையுந்தோறும் வெளிப்பட்டு விளங்குவது போன்றது. காற்றுநின்று திரை மூடியபோது மறைந்த அவள் முகம், கலைந்தமேகம் திரும்பக்கூடியபோது மறைந்த சந்திரனை ஒத்தது.* நைமிசவனத்துக்குப்புறப்பட்டுச் சென்ற சேனையும் சனங்களும் வழியிலே கோமதியாற்றங்கரையை அடைந்தார்கள்.

## இராமன் நைமிசவனத்துக்குப் புறப்படுதல்

இராமன், நைமிசவனத்துக்குச் செல்வானைக் கால்களில் வீரக் கழல்களும், அரையில் பொன்னுடை இரத்தினமிழைத்த கச்சு உடைவாள் அரைப்பட்டிகை (உதரபந்தனம்) ஆகியவைகளும் மார்பில் பதக்கங்களோடு கூடிய (பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்த) மாலைகளும், கழுத்தில் மணிவடமும், விரல்களில் மோதிரங்களும், கைகளில் கடகங்களும், தோள்களில் வாகுவலயங்களும், காதுகளில் மணித்தோடுகளும் அணிந்து நீலமலைமேலே பாலசூரியன் உதயமானாற்போல, நீலமணித்திரளொத்த குடுமித்தலையிலே மணிமுடிசூடி, நெற்றியிலே திருநாமஞ்சாத்திச் சிங்காதனத்தினின்று இறங்கித் தம்பியர் கைத்தாங்கல் (-கைலாகு) கொடுக்க நடந்து கோபுரவாயிலைக் கடந்து, மத்தளமுதலிய வாத்தியங்கள் முழங்க, மங்கையர்வாழ்த்த, மாகதர் (-அரசர்புகழ்கூறும் தொழிலாளர்) ஏத்த, மறையவர் ஆசிகூறத் திருக்கண்ணோக்கம் சென்ற திசைகளிலுள்ளாரெல்லாம் செங்கைகூப்பிக் கும்பிடச்சென்று

---

* மூடுசிவி கைச்செலும் ஒருத்திமுகம், முன்பே
வாடைகது வித்திரை யெடுப்பமழை மஞ்சின்
மாடுற விளங்குமதி ஒத்த எழில் மஞ்சு
கூடுமதி ஒத்தது குலைந்துதிரை வீழ.

சிவிகை-பல்லக்கு. கதுவுதல்-பற்றுதல். மழைமஞ்சு-மழையையுடைய மேகம். மாடு-பக்கம். எழில்-அழகு. குலைந்துவீழ-(திறந்திருந்த) திரைகாற்றால் தூக்கப்பட்டு (விலகியிருந்தநிலை)குலைந்து (திரும்பக்) கீழேவிழப் (பழையபடி மூடி). மதி ஒத்தது என்பது, செய்யுளோசை கெடாதபடி மதிஒத்து என ஈற்றயல் (கடைசி எழுத்துக்கு அடுத்த எழுத்துக்) குறைந்துநின்றது. குலைந்ததிரையெனப் பாடம் இருந்திருக்கலாம். அது ஏடெழுதுவோரால் 'குலைந்துதிரை'யென எழுதப்பட்டிருக்கலாம்.

தேர்மீதேறினன். பாஞ்சசன்னியம் (என்னும் சங்கு) தரித்திருந்த கையிலே கோதண்டம் (என்னும் வில்) ஏந்தியவன் [திருமால் (அவதாரம்) ஆன இராமன்] வந்தான்; தசரதராமன் வந்தான்; தம்பி இலக்குமணனோடு விசுவாமித்திரமுனிவன்பின் சென்றவன் வந்தான்; சிவன் வில்லைமுறித்துச் சீதையைக் கைப்பிடித்து (மணஞ் செய்து) அயோத்திக்குத்திரும்பினவன் வந்தான்; சிறிய தாய் கைகேசி கட்டளையைச் சென்னிமேற்கொண்டு சீதையோடு வனஞ் சென்றவன் வந்தான். மாரீசமானை வதைத்தவன் வந்தான். அநுமனை அடிமைகொண்டு சுக்கிரீவனுக்குத் தோழனாகி வாலியை மாய்த்தவன் வந்தான். கடலணைகட்டி வானரசேனையுடன் இலங்கையடைந்து இராவணாதிபிராக்கதரையெல்லாம் கொன்றவன் வந்தான். அயோத்திக்குத்திரும்பிவரக் குறித்ததினத்தில் திரும்பவில்லையென்று பரதன் தீக்குளிக்காதபடி தடுக்க அநுமனை முன்னாக அனுப்பிப் பின்னாக அயோத்தியை அடைந்தவன் வந்தானென்று சின்னம் முழங்கத் தெருவழியே செல்கின்றானென்று கேட்டவுடனே, இந்திரசாலம்போல(க் காண்போர் உள்பொருளோ இல்பொருளோவென்றுமயங்கி ஆச்சரியமடையச்செய்வதாக உள்ள இடையும், இந்திரகோபம் (-தம்பலப்பூச்சி) போன்ற இதழும், இந்திரசாபம் (-வானவில்) போலும் புருவமும், இந்திரை (-இலக்குமி) வடிவொக்கும் வடிவுமுடையவரும் தம்மை அடைந்தார்க்கு இந்திரபோகம் போன்ற இன்பமளிப்பவருமான மாதர்கள், காற்சிலம்பு கலின் கலினென ஒலிக்கக் கூந்தலும் ஆடையும் குலைய ஆபரணங்கள் அலைந்து மின்னிட விரைந்துவந்து தெருவில் திரண்டுகூடினார்கள். பேதையர் (-ஐந்துவயதுமுதல் ஏழுவயதுவரையுள்ள பருவத்துப் பெண்கள்) முதலாகப் பேரிளம்பெண்கள் (-32 வயதுக்கு மேல் 40 வயதுவரையுள்ள பெண்கள்) இறுதியாகவுள்ள ஏழுபருவத்துப் பெண்களும் மாடங்களிலும் வாசல்களிலும் திண்ணைகளிலும் தெருக்களிலும் நின்று இராமனைக் கண்டு களித்தார்கள். அவன் திருமேனியைக் கருமேகமோ மரகதமலையோ வென்றும், கண்ணும் வாயும் கையும் காலும் செந்தாமரைமலர்களோ வென்றும், இவனைக் கண்ணிற்காணப்பெற்றவர் புண்ணியஞ் செய்தவரென்றும், இவனைப் பிள்ளையாகப்பெறுதற்குக் கோசலாதேவி என்ன பெருந்தவஞ்செய்தாளோவென்றும், கைகேசி, இவனுடைய அருமையான திருமேனியின் மென்மைத்தன்மையைக் கண்டிருந்தும்

முள்ளுங்கல்லுமுள்ள காட்டுக்குப்போம்படி எப்படித்தான் எவிஞளோ என்றும், சீதையையன்றி எந்தமாதையும் மனதாலும் தீண்டாத இவன் பிறமாதரை நோக்கும் நோக்கம் மையல்நோக்கமன்று, பொதுநோக்கமென்றும், மற்றும் பலவாறும் மாதர்கள் கூறுநிற்க, இராமன் நகரைநீங்கி வழிச்சென்று கோமதிநதியையடைந்தான்.

பிரமதேவனை ஒத்த பிராமணர்கள், தண்டு கமண்டலம் குடையேந்திப் பெண்கள்நடக்கை தவருனது (அவர்கள் அருகே செல்லலாகாதென்று) அஞ்சி விலகிச்சென்ருர்கள்.

கூனர் குறளர் முடவரான ஊன உடம்புடையோர், வழிநடுவே வரும் ஆனை குதிரை தேர்களுக்கிடையே அகப்பட்டால் விரைந்து விலகமுடியாதென்று வழியோரமாக ஒதுங்கிச்சென்ருர்கள்.

### இராமன் தனக்கென அமைத்த சாலையில் தம்பியரோடு தங்குதல்.

இராமன், யாகசாலையையும் அரசர்கள் முதலியவர்களுக்காக அமைத்திருந்த இருப்பிடங்களையும் கண்டு மகிழ்ந்து தனக்கெனச் சமைத்திருந்த சாலையில் தம்பியரோடு அமர்ந்திருந்தான்,

### அரசர் வருகை.

வேள்விகாணுதற்கு வேந்தரெல்லாரும் வந்தனர். விபீடணன், அரக்கப்படையோடு படைத்தலைவர்சூழ வந்தான். சுக்கிரீவன், அங்கதன் அனுமான் சாம்பன் நீலன் முதலிய வானரத்தலைவரோடு சேனைசூழ வந்தான்.

### முனிவர் வருகை.

அகத்தியன், புலத்தியன், அத்திரி, ஆங்கிரசன், காசிபன், கோசிகன், கோதமன், பரத்துவாசன் முதலிய முனிவர்கள், தலையிற் சடையும் காதிற் குண்டலமும் கழுத்தில் (துளசி அல்லது உருத்திராக்க)மணிவடமும் கையில் தண்டு கமண்டலமும் அரையில் மாவுரியும் பூண்டவராய், மெய்யேவிளம்பும் நாவும் மெய்ப்பொருளையே தியானிக்கும் சிந்தையுமுடையராய், வேதம் தவசியர் உருக்கொண்டு நடந்தாற்போல வந்து, நைமிசவனத்தை அடைந்தார்கள்.

### நைமிசவனம் நாகரிக நகரமோத்தல்.

பொன்வகைகளும் பூண்வகைகளும் ஆடைவகைகளும் மற்றெல்லாப் பொருள்களும் முனிவர் மன்னர் முதலிய எல்லாவகுப்பு மக்களும் நால்வகைச் சேனையும் அவரவர் வாழ்வதற்கேற்ற வாசத்தலங்களும் அமைப்பெற்று நைமிசக்காடு, நாகரிகநாடொத்தது.

## இராமன் வந்தவர்களை வரவேற்றல்.

இராமன், தான் தொழத்தக்க முனிவர்களைத் தொழுது, தன்னைத் தொழுவாரை வாழ்த்தித் தழுவத்தக்காரைத் தழுவி, முனிவர்க்கும் மன்னர்க்கும் ஆசனமளித்துத் தானும் அரியாதனத்தில் அமர்ந்து, அவர்களோடு கலந்து பேசியபின் விடையளித்தான். அவர்களை இலக்குமணன் அவரவர்க்காகச் சமைத்திருந்த சாலைகளில் தங்கச்செய்தான்.

## இராமன் வந்தவரெல்லாருக்கும் விருந்தளித்துச் சம்மானஞ்செய்தல்.

அந்தணர்முதலாக வந்தவரனைவரும் தந்தம் சொந்த மனைவியர் உபசரித்து உண்பிக்க உண்டவர்போல, பால் தயிர் நெய் பலவகைச் சுவைக்கறிகளுடன் சோறுண்டு, இங்கு நிகழும் இந்த வேள்விபோல எங்கும் எந்த வேள்வியையும் கண்டதில்லையென்று தம்முள்ளே பேசிக்கொண்டார்கள்.

## மன்னருக்குச் சம்மானஞ்செய்தல்.

இராமன், பொதுவாக எல்லாமன்னர்களுக்கும் சிறப்பாகச் சுக்கிரீவ விபீடண குகர்க்கும் அங்கதனுக்கும் அனுமானுக்கும் ஆடையாபரணங்களும் பொன்னும் வழங்கினான்.

## வறியவர்க்கு வேண்டியவற்றை வழங்கல்.

வறியவர்கள்வேண்டியவைகளெல்லாம் வழங்கப்படுமெனப் பறையறைந்து வெளிப்படுத்திப் பழுத்தமரத்தை நாடிவரும் பறவைக்கூட்டம்போலவும் பூத்தமரத்தைத் தேடியடையும் வண்டினம்போலவும் வந்து மொய்த்தவரெல்லாருக்கும் ஆடையோ ஆபரணமோ நிலமோ நிதியோ வேறெவையோ அவரவர் வேண்டியதை அவரவர்க்கு அளித்தான்.

## மறையவருக்குத் தானஞ்செய்தல்.

சுத்தியெய்தற்கு நித்தமும் பலமுறை நீரில் முழுகிப் பாசி பற்றிய தேகமும் பற்றற்ற சிந்தையும் (சிற்றுயிர்கள் மிதிபட்டுச் செத்திடலாகாதென்று கால்விரல்முனைமட்டும் தரையிற்படக்) குந்தி நடக்கும் நடையும் உடைய ஒரு பிராமணன், இராமனை அணுகிப் 'பொன்னும் பொருளும் பூமியும் எனக்கு எதற்கு? (அவையொன்றும் வேண்டேன்.) யான் உன்னை வேண்டிக்கொள்வது ஒன்று உண்டு. அது மாவுரி' என்றான். அவனுடைய அவா இன்மையை

அறிந்து அடக்கமுடியாத அகமகிழ்ச்சியடைந்து அவனுக்கு ஒரு வண்டி மாவுரி அளித்து இனிய மொழிகூறி உபசரித்து அனுப்பினான். வேதமே உருக்கொண்டாற்போன்றவனும் ஐம்பெரும் பூதங்களாலாகிய உடல்களிற் பொருந்திய உயிர்களையெல்லாம் வேற்றுமையின்றி (அபேதமாக)க் கருதுபவனுமான ஓர் அந்தணன் இராமன் ஈந்த பொருளெதையும் கொள்ளானாய், 'நீ "எடுத்துக் கொள்" எனக் கொடுத்த பொருளெதனாலும் எனக்கு எப்பயனுமில்லை. எனக்குப் பயன்படுவது தரையில் வைத்தால் உருளாத கமண்டலம்' என, அவனுக்கு இராமன் இரத்தினமிழைத்த தங்கக் கமண்டலத்தைத் தானஞ்செய்தான். வேறொரு பார்ப்பனன் வந்து 'என் மனைவி இளம்பெண்; அவள் நீ இராமனைக்கண்டால் தங்க அம்மானை வாங்கிவா என்றாள்' என, இராமன் ஒளிவிடும் பன்னிற மணிகள் இழைத்த பொன்னம்மானைகள் பல வழங்கினான். மற்றுமொரு பார்ப்பனன், தன்கொடிய மனைவியின் ஆட்சிப்படுகுழிக்குள் அகப்பட்டவன், அவள் சீறியபோது கருடனைக்கண்ட பாம்பு போலக் கலங்குபவன், தீயவையாவையினும் சிந்தை செல்லாத பரமசாது, 'இராமனிடம் யான் என்ன பொருள் கேட்கவேண்டும்' என்று தன் மனைவியை வினவினான். அவள் 'நீ இராமனைக் காணும்போது பல்லிளித்துக்கொண்டு நிரம்ப நெருங்கிவிடாதே; வெகுதூரத்தில் நிற்கவும் செய்யாதே. நம்முடைய வறுமைக் கொடுமைகளைப்பற்றிப் பஞ்சப்பாட்டுப்பாடிப் பல பொருள்களை வேண்டாமல் கஞ்சிக்குக் கலப்பயறு கேட்டுவாங்கிவா' என்று கூறினாள். அந்த வேதியன் இராமனிடம் வந்தான். இராமன் அவனுடைய வறுமைநிலைமை அறிந்து நிதிக்குவையும் பசுநிரையுங் கொடுத்தான். அவன், 'இவை யெதையும் நான் ஏற்றுக்கொள்ளேன்; ஏனென்றால், என்பாரி "கஞ்சிக்குக் கலப்பயறு வாங்கிவா" என்றாள். அது தவிர வேறெதனையும் நான் வாங்கினேனானால் அவள் சீறுவாள்' என்றான். இந்தப்பார்ப்பனன், ஆசையில்லாதவன்; சுபாவி; கள்ளமின்றி உள்ளதை யொளிக்காது உரைக்கின்றானென்று இராமன் எண்ணித் தானும் சபையோரும் அவன் இயல்பையும் செயலையும் பற்றிப் பாராட்டியபின் கஞ்சிக்கு நூறாயிரங் கலம் பயறோடு அவ்வளவு நெல்லும் அளித்தான்.

[தொடரும்]

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | *திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | | | |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | *நரிவிருத்தம் ... ... ... ... | | | |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... .. ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | *பாண்டியம் ... ... ... ... | | | |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33 | *வேளிர்வரலாறு ... ... ... | | | |
| 34. | *அகப்பொருள்விளக்கம் ... ... | | | |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 10[illegible]) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமி[illegible] | | | |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... | | | |
| 42. | அகராதிநிகண்டு ... ... | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் ... ... ... | | | |
| 51. | *மதங்கசூளாமணி ... ... ... | | | |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயிலந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | குடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 66. | *சந்திரகுப்தன் ... ... ... | | | |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |
| 68. | திருமுருகாற்றுப்படை ... ... ... | 0 | 10 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 40 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்[illegible]ப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் [illegible]பா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.